பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 05 செவ்வாய்க்கிழமை 19.03.2019 கதிர் 135

### இனி இது ரகசியம் அல்ல!

நேற்றுக் காலை முதல் எமது அலுவலகத்துக்கு விடாமல் தொலைபேசி அழைப்புகள்.

வங்கிகள், அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், மாணவர்களின் பெற்றோர் தரப்புகள் என்று பல பக்கங்களில் இருந்தும் பக்கம் 02 ›››

# கிழக்கு இன்று பெரும் மக்கள் எழுச்சி!

## யாழ். பல்கலைச் சமூகம் முழுமையான ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 19

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை அரசுக்கு மீளவும் கால அவகாசம் வழங்கக்கூடாது என்பதையும் சர்வதேச விசாரணையே வேண்டும் என்பதையும் வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை கிழக்கு மாகாணத்தில் பெரும் மக்கள் எழுச்சிப் பேரணியும் கடையடைப்புப் போராட்டமும் நடைபெறவுள்ளன.

இந்தப் போராட்டத்துக்கு அரசியல் கட்சிகள், வடக்கு - கிழக்கில் உள்ள பொது அமைப்புக்கள், பல்கலைக்கழகச் சமூகங்கள் தமது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளன.

## கோட்டா வேண்டாம்! வெல்கம போர்க்கொடி

### விரைவில் அவர் தீர்க்கமான முடிவு



கொழும்பு, மார்ச் 19

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் களுத்துறை மாவட்ட எம்.பியான குமார வெல்கம விரை பக்கம் 11 ›››

## வேட்பாளர் கோட்டாவா? அப்படி ஏதும் முடிவில்லை

### மைத்திரிபால அதிரடிக் கருத்து

கொழும்பு, மார்ச் 19

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பிலோ அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பிலோ ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இன்னமும் முடி பக்கம் 11 ›››

# இலங்கை அரசு மீது மேலும் சர்வதேச அழுத்தம் தேவை!

### தமிழ் மக்கள் இனிமேலும் ஏமாறத் தயாரில்லை ஐ.நா. உயர் அதிகாரியிடம் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 19

தமிழ் மக்கள் தாம் எப்போதும் ஏமாற்றப்படுவதாகவே உணர்கின்றார்கள். அவர்கள் இனியும் ஏமாறத் தயாரில்லை. அவர்களுக்குச் சரியானதைச் செய்வது தொடர்பில் சிங்களத் தலைவர்கள் பின்வாங்குகிறார்கள். இது தொடர்பில் சர்வதேச சமூகம் கூடிய கரிசனை கொள்ள வேண்டும். அதே வேளை, இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற சர்வதேச அழுத்தம் மேலும் தேவை.

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன். பக்கம் 11 ›››



## ஐ.நா. மனித உரிமை ஆணையரை அரச, தமிழர் தரப்பினர் சந்திப்பர்!



ஜெனீவா, மார்ச் 19

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் பங்கேற்கச் செல்லும் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளும், இலங்கை அரச தரப்பு பிரதிநிதிகளும் பக்கம் 11 ›››

## சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்துவதே ஒரே வழி!



### முன்னாள் முதல்வர் விக்கி சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, மார்ச் 19

இலங்கை தொடர்பான உண்மை நிலையை ஐ.நா. செயலாளர் நாயகம் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு எடுத்துக்காட்டி இது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதாக இருந்தால் இலங்கை விவகாரத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு அனுப்ப வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

- இவ்வாறு அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் பக்கம் 02 ›››

## கொழும்பு சென்ற ஹயஸ் புத்தளத்தில் கோர விபத்து!

### யாழ். வாசிகள் உட்பட நால்வர் சாவு!



கொழும்பு, மார்ச் 19

கொழும்பு – புத்தளம் பிரதான வீதியின் நாகவில்லு பகுதியில் இடம்பெற்ற கோர பக்கம் 11 ›››

## வலி. வடக்கில் காணிகள் சுவீகரிப்பை கைவிடாவிடின் தடுத்து நிறுத்துவோம்!

### அரசுக்கு மாவை எம்.பி. எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 19

வலி.வடக்கில் கடற்படை முகாமுக்காக 270 ஏக்கர் காணியை சுவீகரிப்பதறக்கான அளவீடு பக்கம் 02 ›››

## புலம்பெயர் தமிழர்களுடன் நேற்று முரண்பட்டது சரத் வீரசேகர அணி!

### ஜெனீவா உபகுழுக் கூட்டத்தில் பரபரப்பு

ஜெனீவா, மார்ச் 19

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் வளாகத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை தொடர்பான பக்கம் 11 ›››

## கொழும்பு மீது சர்வதேசம் மிகவும் இறுக்கமான பிடி!

### இலங்கை மீதான பிரேரணைக்கு இதுவரை 20 நாடுகள் பேராதரவு

ஜெனீவா, மார்ச் 20

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக எதிர்வரும் 21ஆம் திகதி நிறைவேற்றப்படவுள்ள பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்க பக்கம் 02 ›››

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு

kalaikkathirnews@gmail.com

https://kalaikathir.online

காலைக்கதிர் Kalaikathir



## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று(நேற்று) காலை பிரதமரிடம் தொடர்பு கொண்டு நில அளவீடுகளை நிறுத்தும்படி கேட்டுள்ளேன். சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அளவீட்டுப் பணிகளை அன்றைய தினத்துக்கு முன்னர் நிறுத்தாதுவிட்டால் நாம் அதைத் தடுத்து நிறுத்தப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்போம்

- இவ்வாறு தெரிவித்தார் கூட்டமைப்புநாடாளுமன்றஉறுப்பினர் மாவை சேனாதிராசா.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்தெரிவித்துள்ளவை வருமாறு: -

நகுலேஸ்வரம் கீரிமலைப் பிரதேசத்தில் ஜே/226, ஜே/233 கிராம சேவகர் பிரிவில் கடற்படையின் கட்டுப்பாட்டில் 270 ஏக்கர் நிலம் இன்னும் விடுபடாமல் உள்ளது.

இந்தப் பிரதேசம் நகுலேஸ்வரம் புனித பூமி பிரதேசத்துடன் தொடர்புபட்டது. 2014ஆம் ஆண்டில் வடக்குக்கடற்படைத்தளத்துக்கென 270 ஏக்கர் நிலம் அரசு கையகப்படுத்த அறிவிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டில் 40 ஏக்கர் மீள்குடியமர்வுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 228 ஏக்கர் நிலம் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. 2015ஆம் ஆண்டின் பின் 2016 தைத்திங்களிலிருந்து நகுலேஸ்வரம் புனித பூமிப் பிரதேசங்கள் அரசோ, கடற்படையினரோ கையகப்படுத்தக்கூடாது என்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் படைத்தளபதிகளுடனான கூட்டங்களில் வலியுறுத்தி வந்துள்ளோம்.

2019 ஆரம்பத்திலிருந்து (1) யாழ்ப்பாண திட்டத்தின் படி வடமாகாணத்தின் சர்வதேச கூட்டிணைப்பு மையம் மற்றும் தொடர்புள்ள இடங்கள் ஜே/226, நகுலேஸ்வரம் என்றபிரதேசத்தில் 62 ஏக்கர் நிலமும் (2) காங்கேசன்துறைமுகத்தின் பாதுகாப்பு மையமாக 2 ஏக்கர் நிலமும், (3) கடற்படைக்கு மேலும் 164 ஏக்கர் நிலமும் கட்டாயமாக ஜே/233 காங்கேசன்துறை மேற்கில் வேண்டும் என்றும் கடற்படையினர் வற்புறுத்தியிருந்தனர்.

நகுலேஸ்வரம் புனித பிரதேசத்தில் நகுலேஸ்வரம் கோவிலை அடுத்து பத்து முக்கிய கோவில்கள், சமாதிகள், புனித நீரூற்றுக்கள், ஈமக் கடனியற்றும் நீர்நிலை கடற்கரை உள்ளன. அத்துடன் தனியார் தொழில் துறைகளுக்குரிய நிலங்களும் கையகப்படுத்த அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளன என ஆவணங்களுடன் வாதிட்டு இப் பிரதேசங்கள் கையகப்படுத்த முடியாமல்தடுத்து வந்திருக்கிறோம். நகுலேஸ்வரம் புனித பிரதேசமாக எல்லையிடப்பட வேண்டும். சுற்றலாத்துறை பிரதேசமாக பிரகடனப்படுத்த அனுமதிக்க முடியாது.

2012 - 2014 காலத்தில் தனியாருக்குச் சொந்தமான பிரதேசத்தில்தான் ஜனாதிபதி மஹிந்த தனக்கு வசதியாக 200 கோடி ரூபாவில் மாளிகை கட்டியுள்ளார். இந்த மாளிகையுடன் சுற்றுலாத்துறை நிர்வாகம் அயற் பிரதேசங்களையும் நகுலேஸ்வரப் பூமியிலும் சுற்றுலா மையம் அமைக்கத் திட்டமிடப்பட்டு நிலங்கள் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. சீமந்துத் தொழிற்சாலைப் பிரதேசம் : ஜே/233

2016 தைத்திங்களில் பிரதமர் பலாலிக்கு வந்தபோது சீமந்துத் தொழிற்சாலை மீண்டும் இயங்குவது நிலத்தடி நீர் பாதிக்கப்படும், கடல்நீர்புகுந்துவிடும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும், நில இழப்பு ஏற்படும், நில அதிர்வு ஏற்படும் என்பதால் அத் தொழிற்சாலைப் பிரதேசத்தில் தொழிற்பேட்டை, சிறுதொழில்கள், தொழில் நுட்பத்துறை மையங்களை ஏற்படுத்தி வேலைவாய்ப்பையும், பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படுத்த வேண்டுமெனப் பிரதமரும் நாமும் திட்டமிட்டிருந்தோம்.

2018, 2019ஆம் ஆண்டுகளில் அமைச்சரவைப் பத்திரமும் முன்வைக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டில் அதற்கான வேலைகளை ஆரம்பிக்க நில எல்லைகள் வரையப்படவும் ஆரம்பிக்கப்பட்டது. சீமெந்து உற்பத்திக்காகச் சுண்ணாம்புப் பாறைகள், அகழ்ந்த கிடங்குப் பிரதேசத்தை நிரப்புவதுஎன்றும் திட்டமிடப்பட்டது.

தற்போது சீமந்துத் தொழிற்சாலை ஜே/233 பிரிவில் கடற்படை ஆக்கிரமிக்க அல்லது சுவீகரிக்க அரசு இடமளித்தால் தொழில் துறைகள் உருவாக்கவும், வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தவும், மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும்வாய்ப்புஏற்படமுடியாது.

இந்த நிலப்பரப்பை தொழில் துறைமையமாக மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுவிடுவோம் எனப் பிரதமர் உறுதியளித்துள்ளார். இப் பிரதேசத்தில்தான் சீமெந்துக் கூட்டுத்தாபனநிலங்களும், காங்கேசன்துறை பெரிய மருத்துவமனை 36 ஏக்கர் நிலங்கள் அத்துடன் தனியார் காணிகளும் உள்ளன.

சீமெந்துக் கூட்டுத்தாபனம் 163 ஏக்கர் நிலங்களுண்டு. நல்லிணக்கபுரம் நிலம் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினால் இன்னும் விடுவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பிரதேசத்தில் இராணுவத்தளமும் நிறுவத்திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் அருகாமையில் கிராம சேவகர் பிரிவு ஜே/231 மாவிட்டபுரப் பகுதிகளில் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி கோவில், குளம் குகை உள்ளன. இக் குகையூடாகவே கீரிமலையில் நகுலமுனிவரிடம் சென்று மாவிட்டபுரம் கோவிற்கடவை முருகன் வேல் உள்ள இடத்திற்கு வந்துபிரார்த்தனைசெய்தாளெனும் வரலாற்றுச் செய்தியுமுண்டு.

3. தலசெவன விடுதி மையம் சுற்றுலா மையம் ஜே/234 பகுதியில் இதற்காக அப்பகுதியில் தலசெவன விடுதி, சிறுவர் பூங்கா, காங்கேசன்துறை ஆங்கிலப் பாடசாலை, உணவு பாதுகாப்புக் களஞ்சியம், சொத்துப் பாதுகாப்பு பிரதேசம் தனியார் காணிகள் மொத்தமாக 30ஏக்கர் நிலங்களைச் சுற்றுலாப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்திக்கையகப்படுத்த நிலம் அளவீடு செய்ய முயற்சிக்கப்படுகிறது. தலசெவன விடுதி இராணுவ முகாமிலுள்ளது.

பத்திரிகைகளில் 232 ஏக்கர் நிலம் கடற்படைத்தளமைக்க சுவீகரிக்கப்படவுள்ளது என விவரமான செய்தி வந்துள்ளது. மிக்க நன்றி. தலசெவன விடுதி சுற்றுலாத்துறை மையங்களுக்குநிலங்கள் அளவீடு செய்ய விடுவிக்கப்பட்ட அமைச்சினதோ அல்லது ஜனாதிபதி செயலகத்திலிருந்தோ பரிமாறப்பட்ட செய்திகள் இம்மாதம் 10ஆம் திகதி வரையில்தான் எமது கவனத்துக்கு ஆவணங்களாகக் கிடைத்தன.

ஜனாதிபதி செயலகக் கூட்டத்தில் இவ்விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ஜனாதிபதியுடன் வாதத்தில் ஈடுபட்டிருந்தார். நாடாமன்றத்தில் தலைவர் சம்பந்தனும் நானும், கேப்பாப்பிலவு நில சுவீகரிப்புச் சம்மந்தமாகவும், வலி-வடக்கு நில சுவீகரிப்புச் சம்பந்தமாகவும் கடந்த 12ஆம் திகதி பேசியிருக்கிறோம். எங்கள் தரப்பில் தொடர்புள்ள ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பிரதமர் இதற்கு முன்னரே காணி அமைச்சரிடத்தில் எம் முன்னிலையிலேயே சுவீகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்தும்படி உத்தரவிட்டுள்ளார். இன்றுகாலை பிரதமரிடம் தொடர்பு கொண்டு நில அளவீடுகளை நிறுத்தும் படி கேட்டுள்ளேன். சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி காணியமைச்சர் கயந்த கருணாதிலக்காவையும் காணியமைச்சு செயலாளரையும் சந்தித்து காணி அளவீடுசெய்யும்நடவடிக்கையை நிறுத்தும்படியும் கடிதமூலம் கேட்டுள்ளேன். இப்பொழுது ஜே/226 பகுதியில் நகுலேஸ்வரம் தொடர்புபட்ட நிலங்களையும் சுவீகரிக்க வரும் 22ஆம் திகதி அளவீடு செய்ய அறிவிக்கப்பட்டுள்ளது.

22ஆம் திகதிக்கு முன்னர் காணியளவீடு நடவடிக்கைகளை நிறுத்தாதுவிட்டால் நாம் அதை தடுத்து நிறுத்தப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்போம்.

உயர்நீதிமன்றில்எமதுவழக்குகள் இப்பொழுதும் இருக்கின்றன. உயர் நீதிமன்றத்திலும் ஆட்சேபனை தெரிவித்து சுவீகரிப்பு நடவடிக்கைகளை தடுக்க முயற்சி செய்வோம் என உறுதிப்படுத்துகின்றேன் - என்றுள்ளது. (ஐ)

## சர்வதேசக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வீ.விக்னேஸ்வரன்.

'தமிழர்களின் பிரச்சினைகளை இழுத்தடிப்புச் செய்து தூர்ந்துபோகச் செய்வதற்கான நடவடிக்கைகளே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்நேற்றுக்காலைமட்டக்களப்பு மறைமாவட்டஆயர்பொன்னையா ஜோசப் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதனை அடுத்து இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்– ஜெனீவா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குக் கால அவகாசம் வழங்குவது என்பது, நான்கு வருடத்தில் செய்யாததை இரண்டு வருடங்கள் மேலும் கொடுப்பதால் அது நடைமுறைப்படுத்தப்படாது என்பது எமது கருத்து.

போர்வீரர்களுக்கு எதிராக எந்தவிதமான விசாரணைகளையும் முன்னெடுக்க அனுமதிக்க மாட்டோம் என ஜனாதிபதியே கூறியிருக்கின்றார்.

இவ்வாறான கருத்துகள் முன்வைக்கப்படும்போது மேலும் மேலும் கால அவகாசம் வழங்கப்படுவதால் எந்தவித நன்மையும் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போவதில்லை. இதனால் மக்களின் பிரச்சினை தொடர்ச்சியாக இழுபறிக்கே செல்லும்.

எமது பிரச்சினைகளை இழுத்தடிப்பு செய்து தூர்ந்துபோகச் செய்வதற்கான நடவடிக்கைகளே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு அந்நிய நாடுகளும் உதவும் வகையில் செயற்படுவதுடன் எமது கட்சிகளும் அவ்வாறு செய்வதால் தங்களுக்குரிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைத்துச் செயற்பட்டுவருகின்றன.

ஐ.நா. செயலாளர் நாயகம் பாதுகாப்புச் சபைக்கு உண்மையை எடுத்துக்காட்டி இது தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதாக இருந்தால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இதனை அனுப்பவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவுள்ளது.

அரசியல்கட்சிஒன்றுதொடங்க வேண்டிய அவசியம் எமக்கு இருக்கவில்லை. மக்களுக்கு இருந்தது. மக்கள் வாக்களித்தவர்கள். அவர்களுக்கு உரியதை செய்யாமல்தமக்கு இஷ்டமானதை தான்தோன்றித்தனமாக தாங்கள் நினைப்பதுதான் சரி என்பதை அவர்கள் செய்துவந்தார்கள். இது, எங்கள் அடிப்படைக் கொள்கைகளை மறந்து செயற்படுவதாக எங்களுக்கு உணர முடிந்தது. அதன் காரணமாக எங்களுக்குப்புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எங்கள் மக்கள் தங்களை தாங்களே பார்க்ககூடிய தேவை ஏற்பட்டுவருகின்றது. மத்திய அரசு ஏதாவது தரும், வெளிநாடுகள் ஏதாவது தரும் என்று தொடர்ந்து நாங்கள் வாழமுடியாது. எங்களை நாங்களே நம்பி எங்களது வாழ்க்கையை முன்கொண்டு செல்வது அவசியமாகின்றது.

எங்களுக்கு அரசியல் தீர்வு இன்னும் தரப்படவில்லை. பொருளாதார ரீதியாக நன்மைகள் தருவதாகக் கூறினாலும் தாங்கள் நினைத்ததையே எங்களுக்குத் தருவார்களேயொழிய நாங்கள் கேட்பதை தரமாட்டார்கள். இந்த நிலையில் மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, எமது அடிப்படை விடயங்களை நாங்கள் தவறவிட்டால் எதிர்காலத்தில் எங்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாகவே புதிய கட்சியை உருவாக்கியிருக்கின்றோம்.

தமிழ் மக்களின் தலைமைகள் தமிழ் மக்களின் தேவைகள் தொடர்பில்உரியநடவடிக்கைகளை எடுக்காமல் வந்ததன் விளைவே தமிழ் மக்கள் கிழக்கில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குவதற்கு காரணமாக அமைந்தது. இதனைச் சீர்ப்படுத்துவது என்பது மிகவும் சிக்கலாகவும் கஷ்டமாகவும் இருக்கப்போகின்றது.

கிழக்கில் காணப்படும் காணிப் பிரச்சினைகள் மற்றும் காணி அபகரிப்பு தொடர்பில் முன்னாள் காணி ஆணையாளர்கள், சட்டத்தரணிகளைக் கொண்டு குழுவொன்றை அமைத்து புள்ளிவிவரங்களைப் பெற்றதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கலந்தாலோசனை செய்யவுள்ளோம்.–என்றார். (ஐ)

## கொழும்பு மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேலும் பல நாடுகள் முன்வந்திருக்கின்றன என்று ஜெனீவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டன்–ஜேர்மனி தலைமையில் கனடா, அயர்லாந்து, மொன்ரெனிக்ரோ, மசிடோனியா ஆகிய நாடுகள் இணைந்து இலங்கை தொடர்பான பிரேரணையை முன்வைத்துள்ளன.

இந்தப் பிரேரணை எதிர்வரும் 21ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பிரேரணைக்கு இலங்கையும் இணை அனுசரணை வழங்க இணங்கியுள்ளதால், வாக்கெடுப்பு நடத்தப்படாமலேயே அது நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தநிலையில், இந்தப் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதற்கு மேலும் பல நாடுகள் முன்வந்துள்ளன.

அல்பேனியா, ஆஸ்திரேலியா, ஒஸ்ரியா, பெல்ஜியம், பல்கேரியா, குரோஷியா, டென்மார்க், பிரான்ஸ், கிரீஸ், இத்தாலி , நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகள் இணை அனுசரணை வழங்க முன்வந்திருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

மேலும் பல நாடுகள் இணை அனுசரணைப் பட்டியலில் இணையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒரே விடயத்துக்கான விசாரிப்புகள்.

"நாளை (இன்று) செவ்வாயன்று ஹர்த்தாலா? கடையடைப்பா? அலுவலகங்கள் இயங்குமா? பஸ் சேவை நடக்குமா? - என்று பலரும் விடாது விசாரித்தனர்.

வீதியில் - சாப்பாட்டுக் கடையில் - பொது இடத்தில் - என்று பலரும் சந்திக்கும் மையங்களில் கூட இதுதான் விவாதப் பொருள்.

ஒருவர் சந்தேகத்தில் கேட்க, மற்றவர் ஏதோ தனக்குத் தெரிந்த விடயம்தான் என்பது போல விளாச, இந்த விவகார விவாதம் நேற்று பல இடங்களிலும் இழுபட்டது.

ஆயுத பலத்தினாலான போராட்டத்தில் பெரும் தியாகங்களைப் புரிந்தும், இராணுவ ரீதியில் அந்த வலிமை சிதறடிக்கப்பட்ட நிலையில், இப்போது தமிழர்களிடம் எஞ்சியிருப்பது ஜனநாயக வலிமை ஒன்றே.

அந்த ஜனநாயக வலிமையில் - ஜனநாயகப் போராட்டத்தில் - ஒரு வழிமுறைதான் கடையடைப்பு, ஹர்த்தால் முதலியவை.

அந்த வலிமையையும் எடுத்தற்கெல்லாம் பிரயோகித்து அதனைக் கொச்சைப்படுத்துவோமானால் அதுவும் கூட வலிமையிழந்து நீர்த்துப்போன ஒன்றாகிவிடும்.

தங்கள் பக்கம் நியாயமிருக்கின்றது என்ற வாதத்துடன், அதனை உலகுக்கு எடுத்துக்காட்ட கிளம்புவோர் எல்லாம் எடுத்த எடுப்பிற்கு கடையடைப்பு, ஹர்த்தால் என்று புறப்பட்டால் கடைசியில் அந்தப் போராட்ட வடிவங்களுக்கும் மவுசு குன்றி விடும்.

தவிரவும், இத்தகைய போராட்டங்களை அறிவிப்பவர்கள், அதன் நியாயம், தாக்கம், தெளிவு குறித்து முதலில் சிந்தித்துத் தீர்மானிக்க வேண்டும். அதில் உறுதியாகச் செயற்பட வேண்டும்.

ஏற்கனவே, காணாமல் போனோருக்கான விவகாரத்தில் தமிழர் தரப்பின் நியாயத்தை முரசறைவதற்காக வடக்கில் ஒரு ஹர்த்தால் - கடையடைப்பு - சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர்தான் - முன்னெப்போதும் இல்லாத வகையில் தீவிரத்துடன் நடத்தி முடிக்கப்பட்டது. வடக்கையே முடக்க வைத்தது அந்த எழுச்சிப் போராட்டம்.

இப்போது, கிழக்கில் இன்று - அந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது.

அதற்கு இடையில் கிழக்கு மாகாணத்தில் அந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் தம்பாட்டில் அங்கு நடந்த ஒரு செய்தியாளர் மாநாட்டில், கிழக்கு மக்களின் இந்த ஹர்த்தாலுக்கு வடக்கு மக்களும் ஆதரவு தர வேண்டும் என்று கூற, அது இங்கு பெரும் குழப்பத்தை - முரண்பட்ட கருத்து நிலைப்பாட்டை - ஏற்படுத்தி விட்டது.

இத்தகைய போராட்ட அறிவிப்பை விடுப்பவர்கள் எழுந்தமானமாகப் பேசுவதோ, அறிக்கை விடுவதோ தவறாகும்.

வடக்கிலும் ஹர்த்தாலோ, கடையடைப்போ நடத்த வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்பார்களாயின் அதை அவர்கள் முறைப்படி செய்ய வேண்டும். வடக்கில் உள்ள சமூக, அரசியல் தரப்புகளுடன் பேசி தெளிவான - திட்டவட்டமான -. ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். அதனை மிகத் தெளிவாகவும், உறுதிபடவும் மக்களுக்கும் தெரியப்படுத்தி அதனடிப்படையில் ஒழுங்குமுறைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து, மைக்கிடைத்த இடங்களில் எல்லாம், விட்டேத்தியாகப் போராட்டங்களை எழுந்தமானமாக அறிவித்து விட்டுப் போகின்ற பழக்கம் மிகத் தவறாகும்.

இத்தகைய போராட்டங்களுக்கு முதலில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்; எடுக்கப்பட்டால் அவை தெளிவாக மக்களை எட்டக் கூடியதான ஊடக அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும்.

கிழக்கில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் அதில் இன்று வெற்றி காண்பார்கள் என்று நம்புகிறோம்.

ஆனால், மக்களுக்கு தெளிவான வழிகாட்டலை வழங்கும் தமது பொறுப்பைக் கோட்டைவிட்ட அவர்கள் அதனால் வடக்கு மக்கள் மத்தியில் ஒரு தேவையற்ற குழப்பத்தையே உருவாக்கி விட்டிருக்கின்றார்கள்.

இத்தகைய வழிகாட்டுதல்களில் தொடரக் கூடிய போராட்டங்கள், அவை வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் இருந்தும் இவ்வாறான பொறுப்பற்ற போக்கினால் - தவறுகளால் - கடைசியில் தோற்றுத் தான் போய்விடும்.

போராட்டங்களின் ஏற்பாட்டாளர்கள் இனிமேலாவது பொறுப்புடன் சிந்திப்பார்களாக! இத்தகைய தேவையற்ற குழப்பங்களை சமூகத்தில் உருவாக்காமல் தெளிவுடன் செயற்படுவார்களாக!

- மின்னல் -

# மட்டக்களப்பு ஆயருடன் விக்கி நேற்றுச் சந்திப்பு



மட்டக்களப்பு, மார்ச் 19

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பு நேற்றுக் காலை ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும் ஆயருடன் முன்னாள் முதலமைச்சர் கலந்துரையாடினார்.

குறிப்பாக இன்று மட்டக்களப்பில் முன்னெடுக்கப் படவுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு அனைவரையும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு வலுச் சேர்க்குமாறு இருவரும் அழைப்பு விடுத்தனர்.

ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸில் தொடர்பான விடயங்கள் குறித்தும், கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

# வவுனியாவில் இ.போ.ச.- தனியார் பஸ் ஊழியர்களிடையே முறுகல்!

## நேற்று இ.போ.ச. சேவைகள் முடக்கம்



வவுனியா, மார்ச் 19

தனியார் பஸ் ஊழியர்களுடனான பிரச்சினை காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை பஸ் ஊழியர்கள் நேற்றுக் டிப்போ தொடக்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

வவுனியா இ.போ.ச.வினருக்கும் தனியாருக்கும் இடையே இணைந்த நேர அட்டவணை மற்றும் இணைந்த சேவை தொடர்பாக பிரச்சினைகள் நிலவி வந்துள்ளன. இந்த விடயம் தொடர்பாக வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

எனினும் நீதிமன்றத்தின் கட்டளையைப் புறக்கணித்து அதனை எதிர்க்கும் வகையில் தனியாரும் ஒரு சில பொலிஸாரும் ஈடுபட்டமையாலேயே வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளனர் என பஸ் ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக அரச ஊழியர்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகினர்.

(ஐ - 100)

# தென் மாகாண சபை உறுப்பினர் ரத்தரங் நேற்று பதவி விலகினார்

கொழும்பு, மார்ச் 19

தென் மாகாண சபை உறுப்பினர் கிரிசாந்த புஷ்பகுமார (ரத்தரங்) அரசியலில் இருந்து விலகுகிறார் என அறிவித்துள்ளார்.

16 வயதுப் பாடசாலை மாணவி ஒருவரைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினரான கிரிசாந்த புஷ்பகுமார அண்மையில் கைதுசெய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதனை அடுத்து அவர் நேற்றுக் காலியில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

என் மீதான குற்றச்சாட்டுக்களை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இந்தக் குற்றச்சாட்டுடன் எனக்குத் தொடர்பு இல்லை. என் மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டு அல்லது குற்றச்சாட்டுக்கு பயந்தும் வழக்குக்குப் பயந்தும் நான் இந்த முடிவை எடுத்துள்ளதாகச் சிலர் நினைக்கலாம். சிலவேளைகளில் இதனை தவறான முறையில் அர்த்தப்படுத்தலாம். நான் இந்தச் சவாலுக்கு ஒருபோதும் அஞ்சவில்லை என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டதால்தான் சாதாரண பொதுமகனாக நீதிமன்றத்துக்குச் செல்ல விரும்புகின்றேன். மாகாண சபை உறுப்பினர் பதவியுடன் எனக்கு நீதிமன்றம் பிணை வழங்கினால் அதனை தவறாகவே பார்க்கின்றனர். நீதிமன்றம் தண்டனை வழங்கினாலும், வழங்காவிட்டாலும் அதனைத் தவறு என்றே கூறுவார்கள்.

எனவே சுயாதீன நபராக நீதிமன்றத்துக்குச் சென்றால் நீதிமன்றின் தீர்ப்பைச் சுயாதீனமாகவே பார்ப்பார்கள். இல்லாவிட்டால் உயர் இடங்களில் இருந்து அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாக நீதிமன்றத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முற்படுவார்கள்.

எனவே எனக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் பதவிகள், மாகாண சபை உறுப்பினர் பதவி உள்ளிட்டவற்றில் இருந்தும் அரசியல் நடவடிக்கைகளில் இருந்தும் விலகிக்கொண்டு சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளவுள்ளேன் - என்றார். (ஐ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கவேண்டும்

## வலியுறுத்துகின்றார் வாசுதேவ

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக் கோரி நிற்கின்றனர். ஆனால், 800 ரூபா வரை சம்பள உயர்வு வழங்க முடியும் என நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சாதாரண நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கான மாதாந்தச் செலவு 54 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில், பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை எவ்வளவு வீழ்ச்சி அடையும் எனச் சிந்திக்க வேண்டும்.

எனவே, அவர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அது மாத்திரமின்றித் தோட்ட நிர்வாகத்திலும் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தோட்டங்கள் அரசுக்குச் சொந்தமானவை. அவை கம்பனிகளுக்கு குத்தகை அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளன. எனவே, அங்கு இடம்பெறும் மோசடிகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# நியூஸிலாந்து சம்பவத்தில் கைதானவருக்கு கடுமையான தண்டனை வழங்கவேண்டும்!



நஸீர் அஹமட் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 19

நியூஸிலாந்திலுள்ள இரண்டு பள்ளிவாசல்களில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற சம்பவங்கள் அந்நாட்டின் கீர்த்திக்கும் அதன் பெருமைக்கும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன. காட்டுமிராண்டித்தனமாக நடத்தப்பட்ட இந்தச் சம்பவத்தைத் துரிதகதியில் கட்டுப்பாட்டுக் கொண்டு வந்து, துப்பாக்கிதாரியை கைதுசெய்துள்ள அந்த நாட்டின் அரசைப் பாராட்ட வேண்டும். பிரெண்டன் ட்ரன்ட் என அடையாளம் காணப்பட்டுள்ள அந்தத் தீவிரவாதிக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான நஸீர் அஹமட்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:

மனித நேயத்துக்கும் நாகரிகத்துக்கும் அப்பால் அப்பாவி இஸ்லாமிய மக்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலானது 50 பேரைப் பலி எடுத்துள்ளதுடன் பலரையும் காயமடையச் செய்துள்ளது. இதில் கொல்லப்பட்டவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

கடந்த வருடம் நானும் இந்தப் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுதிருக்கின்றேன். நியூஸிலாந்து செல்லும் வெளிநாட்டு முஸ்லிம்கள் விரும்பிச் செல்லும் இந்தப் பள்ளிவாசலில் இத்தகையதொரு சம்பவம் நடைபெற்றுள்ளமை உலகம் முழுவதும் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இன அழிப்பின் ஓர் அம்சமாகவே இதனையும் பார்க்கச் செய்கின்றது.

அந்தச் சம்பவத்தில் கைதாகியிருக்கும் கொலையாளிக்குக் கடுமையான தண்டனையை வழங்குவதன் ஊடாக இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருக்கும் வண்ணம் முன்னெச்சரிக்கை வழங்க முடியும். அத்தகைதொரு நிலைப்பாட்டை அந்நாட்டின் பிரதமர் ஜசிந்தா ஆர்டேர்ன் எடுப்பார் என நாம் நம்புகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## காணாமல் போனோர் செயலகத்தின் அதிகாரங்களை வரையறை செய்யுங்கள்!

காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் தொடர்பில் பல தரப்பினரும் வெளியிடும் தகவல்கள் குருடன் யானையைப் பார்த்த கதையாகவே உள்ளன.

இந்த அலுவலகத்தின் குறைபாடுகள் தொடர்பில் பல விடயங்களை நாமே இந்தப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டியாகி விட்டது.

★ இந்த அலுவலகத்துக்கு எந்தவொரு நீதிமன்ற அதிகாரமும் இல்லை.

★ இந்த அலுவலகத்தினால் கண்டு பிடிக்கப்படும் எந்தவொரு விடயமும் குற்றவியல் அல்லது சிவில் சட்ட மீறல் சம்பந்தமான குற்றத்திற்கு வழி வகுக்காது.

★ இந்த அலுவலகம் எந்த இராணுவ அதிகாரியையோ, துணை இராணுவப் படையினரையோ விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கொண்டதல்ல.

- இது போன்ற பல விடயங்கள் - இந்த அலுவலகத்தின் குறைபாடுகள் பற்றிய பட்டியல் - பல தடவைகள் தமிழ் ஊடகங்களில் வெளியாகி விட்டன.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் இந்த அலுவலகம் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ இப்போது வெளியிட்டுள்ள தகவல்கள் இதற்கு மாறானவை.

இந்த அலுவலகத்தினால் நாட்டுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும், நாட்டின் இறைமைக்கும் பேராபத்து என்று முறையிடுகின்றார் அவர்.

★ நீதிமன்றம் என்ற பெயர் இல்லாவிடினும், இந்தக் காணாமல் போனோர் அலுவலகம் ஆள்களுக்கு அழைப்பாணை விடுக்கவும், சாட்சிகளை விசாரணை செய்யவும், தன்னுடையபாட்டில் விசாரணைகளை முன்னெடுக்கவும் அதிகாரம் கொண்டது.

★ இந்த அலுவலகம் வாரண்ட் உத்தரவு ஏதுமின்றித் தான் விரும்பிய எந்த நேரத்திலும், ஏதேனும் பொலிஸ் நிலையத்திலோ, சிறைச்சாலையிலோ, இராணுவ நிலையங்களிலோ திடீர் சோதனை நடத்தவும், அங்குள்ள ஆவணங்களையோ, பொருள்களையோ கைப்பற்றவும் அதிகாரம் கொண்டது.

★ அது மாத்திரமல்ல, ஆயதப் படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் உட்பட அனைத்து அரச கட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் அரச இரகசியக் காப்புச் சட்டத்தையும் மீறி இந்த அலுவலகத்துக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

★ மகா சங்கத்தினரின் எதிர்ப்பையும் மீறி 'காணாமல் போவதைத் தடுத்தல் சட்டம்' என்ற பெயரில் அரசு நிறைவேற்றிய சட்ட ஒழுங்கு நாட்டுக்கு மிகவும் ஆபத்தானது. இலங்கையில் காணாமல் போதல் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஒருவரை வெளிநாடுகளின் விசாரணைகளுக்குக் கையளிப்பது வரை மிக மோசமான சட்ட ஏற்பாடுகளை இது கொண்டுள்ளது.

- இப்படிக் காணாமல்போனோர் அலுவலகமும் அது தொடர்பான சட்டங்களும் மிக ஆபத்தானவை, மிக மோசமானவை என்று குரல் எழுப்புகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

மறுபுறத்தில் இந்த அலுவலகம் பயனற்றது. யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி செய்வதற்கு - உண்மைகளைக் கண்டறிவதற்கு - பொறுப்புக் கூறலை நிலைநிறுத்துவதற்கு - மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கு இது உதவப் போவதில்லை என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடாகும்.

குறிப்பாக பாதிக்கப்பட்டோரும், காணாமல்போனோரும் யுத்தக் குற்ற அலுவலகங்களினால் பயன் ஏதுமில்லை என்ற ஒரு நிலைப்பாட்டைத்தான் வெளிப்படுத்தி, பிரதிபலித்து நிற்கின்றார்கள்.

ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நாற்பதாவது அமர்வில் இலங்கை விவகாரம், வரும் நாள்களில் அங்கத்துவ நாடுகளினாலும், பிற தரப்புகளினாலும், பரிசீலிக்கப்படவிருக்கின்றது.

இலங்கை தொடர்பான புதிய பிரேரணை ஆய்வுக்கும் அங்கீகாரத்துக்கும் உட்படுத்தப்பட விருக்கின்றது.

இந்தப் பிரேரணையில் காணாமல் போனோர் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்படும் என்பதால், இந்த அலுவலகம் தொடர்பான சில தெளிவான கருத்து நிலைப்பாடுகளை அங்கு பெற்றுக் கொள்வதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பிடமிருந்து கோரிக்கைகளும், வற்புறுத்தல்களும் முன்வைக்கப்படுவது அவசியமாகும்.

இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள், அதிகாரங்கள், பலம், பலவீனங்கள் போன்றவை தொடர்பில் தெளிவான வரையறைகளை - இனியும் காலதாமதம் செய்து இழுத்தடிக்காமல் - ஏற்படுத்திக் கொள்வது மிக மிக அவசியமாகும்.

# யாழில் 3,918 ஏக்கர் காணிகள் படை வசம் 3,642 ஏக்கர் காணிகள் தனியாருடயவை!

## டக்ளஸ் தேவானந்தா சபையில் சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 19

யாழ்ப்பாணக் குடாநாட்டை எடுத்துக் கொண்டால் தற்போது படையினர் வசமுள்ள 3,918 ஏக்கர் காணியில் 3, 642 ஏக்கர் காணிகள் தனியாருக்குச் சொந்தமானவையாகும். எனவே, எமது மக்களது சொந்தக் காணி, நிலங்களையே எமது மக்களுக்கு விட்டுக் கொடுக்கத் தயாரில்லாத நீங்கள், எண்டர்பிரைசஸ் ஸ்ரீ லங்காவை அல்ல எந்தபிரைசஸ் ஸ்ரீ லங்காவைக் கொண்டு வந்தாலும் நடுத்தெருவில் நிற்கின்ற எமது மக்களுக்கு ஏற்படப்போவது ஒன்றுமில்லை என்றே கூற வேண்டியுள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு, தொலைத் தொடர்புகள், வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் பற்றிய அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு ஆகியன தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் மிக அதிகளவில் காணி உரிமங்கள் தொடர்பிலான பிரச்சினைகள் நீடிக்கின்றன. திருகோணமலை மாவட்டத்தில் இப்பிரச்சினையானது பல்வேறு பகுதிகளிலும் இன்னமும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. பட்டிணமும், சூழலும் பிரதேச செயலாளர் பிரிவை எடுத்துக் கொண்டாலும், திருகோணமலை பிரதேச செயலாளர் பிரிவை எடுத்துக் கொண்டாலும் ஏகப்பட்ட பிரச்சினைகள் காணி உரிமங்கள் தொடர்பில் தொடர்கின்றன.

வவுனியா மாவட்டத்திலே தமிழ்ப்பிரதேசசபையின் கட்டடங்கள் அடங்கலாக விளையாட்டு மைதானம், ஆயுர்வேத வைத்தியசாலை கட்டடங்கள் போன்றவற்றுக்குக்கூட இதுவரையில் காணி உரிமங்கள் இல்லை என்றே கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் காணி உரிமங்கள் தொடர்பில் இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஏராளம் என்பதை கடந்த காலங்களிலும் இங்கு சுட்டிக்காட்டியிருந்தோம்.

அதேநேரம், வடக்கிலே கோயில் காணிகளில் குடியிருக்கின்ற மக்களின் காணி உரிமங்கள் தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஓர் ஏற்பாடு மிகவும் அவசியமாகவுள்ளது. இவ்வாறு கோவில் காணிகளில் குடியிருக்கின்ற பெரும்பாலான மக்கள் காணிக்கான உரிமங்கள் இல்லாத நிலையில், எவ்விதமான வீடமைப்புத் திட்டங்களையும் பெற இயலாத நிலை காணப்படுகின்றது.

அந்தவகையில் எமது மக்களின் காணி தொடர்பிலான அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பில் காணி அமைச்சு விரைவான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்வர வேண்டும் – என்றார். (ஐ)

# இளம் தலைவர்கள் அன்றே உருவாகியிருந்தால் நாட்டில் 3 தசாப்த காலப் போர் இருந்திருக்காது

## கூறுகின்றார் வடிவேல் சுரேஷ்



கொழும்பு, மார்ச் 19

தற்போது காணப்படுவது போன்ற இளம் தலைவர்கள் அன்றே உருவாகியிருந்தால் மூன்று தசாப்த கால யுத்தம் நாட்டில் இடம்பெற்றிருக்காது என பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், வரலாற்றில் முதல்முறையாக மலையக விளையாட்டுத்துறைக்கு அதிக தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மலையகத்திற்கு மாத்திரமின்றி வடக்கு, கிழக்கு என முழு நாட்டையும் உள்ளடக்கியதாக விளையாட்டுத்துறைக்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்மூலம், மலையக, வடக்கு, கிழக்கு இளைஞர்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுசெல்வதற்குவாய்ப்பு கிடைத்துள்ளது.

இவ்வளவு காலமும் மட்டுப்படுத்தப்பட்ட வேலைத்திட்டமே முன்னெடுக்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது பரந்துபட்ட அடிப்படையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறு அனைவரும் இனமதமற்ற தலைவர்களாக செயற்பட முன்வந்தால் நாட்டில் சுபீட்சம் ஏற்படும். இவ்வாறான இளம் தலைவர்கள் அன்றே உருவாகியிருந்தால் யுத்தம், பாகுபாடு, இனவாதம் போன்றன தோற்றம் பெற்றிருக்காது – என்றார். (ஐ)

## சில இடங்களில் மின்சாரம் துண்டிப்பு

கொழும்பு, மார்ச் 19

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின், இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரம் செயலிழந்துள்ளமை காரணமாக, சில பகுதிகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின் சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மின் உற்பத்தி இயந்திரம் செயலிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை சீரமைக்கும் பணிகளும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என அமைச்சு கூறியுள்ளது.

# குளோரின் சிலிண்டரில் கசிவு; மூன்று பேர் வைத்தியசாலையில்

கொழும்பு, மார்ச் 19

மஸ்கெலியா நகருக்கு நீரை வழங்கும் நீர்த்தாங்கிக்கு அருகிலுள்ள 100 கிலோகிராம் எடை கொண்ட குளோரின் சிலிண்டரில், நேற்றுக் காலை ஏற்பட்ட வாயுக் கசிவு காரணமாக, மூவர் பாதிக்கப்பட்ட நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மஸ்கெலியா கிளையிலுள்ள குளோரின் சிலிண்டரிலேயே வாயுச் கசிவு ஏற்பட்டுள்ளது.

இதனால், அந்தக் கிளையில் பணியாற்றிவந்த அதிகாரி, முகாமையாளர் நிரோன் பண்டார, ஆய்வு கூட உத்தியோகத்தர் ஆகியோர் பாதிப்படைந்துள்ளனர்.

வாயுக் கசிவின் பாதிப்பைக் கருத்திற்கொண்டு, அப்பகுதியிலுள்ள மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு மஸ்கெலியா பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

## நாளை

20.03.2019
புதன்கிழமை
நட்சத்திரம்: பூரம் பி.ப 3.51 வரை.
திதி : சதுர்த்தசி மு.ப 9.58 வரை.
இராகுகாலம் : 04.48 – 6.18
சுப நேரம் : 12.18 – 01.48

# மஹிந்த தரப்புக்கு செய்தி அனுப்பி வைத்த மைத்திரி

## கோட்டாவை வேட்பாளராக அறிவித்தமையை அடுத்து

கொழும்பு, மார்ச் 19

மஹிந்த தரப்புக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் திரைமறைவுக் காய் நகர்த்தல்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டுள்ளார் என அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கென்யப் பயணத்தை முடித்து நாடு திரும்பிய ஜனாதிபதி மைத்திரி, ஜனாதிபதி வேட்பாளரைத் தீர்மானித்திருந்தால், அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாறு மஹிந்த தரப்புக்குத் தகவல் அனுப்பியுள்ளார்.

மஹிந்த தரப்பினர் ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்த பின்னர் கூட்டணி பேச்சைத் தொடர்வதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கலாம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டு அந்தத் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஏகோபித்த ஆதரவுடன், மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுப்பியுள்ள தகவல்களுக்கு அமைய கூட்டணி அமைவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

சர்வதேச மகளிர் தினம்:

## யாழ் கூட்டுறவு சபை நடத்தும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் சர்வதேச மகளிர் தினம் தொடர்பான மாவட்ட மட்ட கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சபையின் மாவட்ட மகளிர் குழுவின் தலைவி திருமதி ஜெபமணி ஜோசப் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் வாழ்த்துரை வழங்க, கூ.அ.உ. ஆணையாளர் செல்வி பரீன்ஸஸானா அப்துல் சமீயூ கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார்.

இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய முகாமையாளர் பா.சிவதீபன், வடக்கு உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி நளாயினி இன்பராஜ் ஆகியோர் கருத்துரை வழங்குவர். சபையின் செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம் நன்றியுரை ஆற்றுவார். (இ)

யாழ். கச்சேரி நல்லூர் வீதி

## நாச்சி அம்மன் ஆலய தேர் வெள்ளியன்று

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணம், கச்சேரிநல்லூர்வீதி, பாணன் குளம் நாச்சி அம்மன் ஆலயவருடாந்தமகோற்சவம் கடந்த 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை புதன்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும் நாளைமறுதினம் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை 7மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து 8 மணிக்கு, அம்பாள் தேரில் ஆரோகணித்து திருவீதியுலா வருவார். மறுநாள் சனிக்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (இ)

சாவகச்சேரி, நுணாவில் மத்தி

## கந்தசுவாமி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் வெள்ளியன்று

சாவகச்சேரி, மார்ச் 19

சாவகச்சேரி நுணாவில் மத்தி, வைரவர் கோவில் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான சம்புரோக்ஷண 4 ஆவது மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.35 மணி முதல் 7.30 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும்.

மஹா கும்பாபிஷேக கர்மாரம்பம் நேற்று திங்கட்கிழமை காலை விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமானது. நாளை மறுதினம் வியாழக்கிழமைகாலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என்று ஆலய அர்ச்சகரும் நிர்வாகியுமான பிரம்மஸ்ரீ ச.லோகேஸ்வரசர்மா (ரவி ஐயர்) தெரிவித்தார். (இ)

## பொலிஸ் அதிகாரி மீது கத்திக் குத்து

குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, பக்மீகொல்ல பகுதியில், கடமையிலிருந்த பொலில் அதிகாரியொருவர், கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் , குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரொருவரை கைது செய்வதற்காக நேற்றுமுன்தினம் சென்றிருந்த போதே, சந்தேகநபர் பொலிஸ் அதிகாரியைக் கத்தியால் குத்திவிட்டு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளார்.

இதன்போது, கடமைக்குச்சென்றிருந்த மற்றுமொரு பொலிஸ் அதிகாரி சந்தேகநபரை மடக்கிப் பிடித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை சோதனையிட்டபோது, அவரிடமிருந்து வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

பக்மீகொல்ல பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் மாணவருக்கான தமிழிசைப் போட்டி

கொழும்பு, மார்ச். 19

கொழும்புத் தமிழ்ச் சங்கம் வருடாந்தம் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான தமிழிசைப் போட்டி (வட மாகாணத்திற்கான) யா/மத்திய கல்லூரியில் எதிர்வரும் 23ஆம் 24ஆம் திகதிகளில் (சனி மற்றும் ஞாயிறு) காலை 7.30 மணி முதல் மாலை 6.00 வரை நடைபெறும்.

23ஆம் திகதி பிரிவு - 1 காலை 7.30 மணிக்கும், பிரிவு - 2 பி.ப 1.00 மணிக்கும், 24ஆம் திகதி பிரிவு - 3 காலை 7.30 மணிக்கும், பிரிவு - 4 பி.ப 1.00 மணிக்கும் நடைபெறும். போட்டி யில் பங்கெடுக்கும் மாணவர்கள் கலாசார உடையுடன் சமுகம் தருமாறும். உங்கள் பாடசாலையை வெளிகாட்டும் அடையாளங்களை (Padges) பயன்படுத்தாதீர்கள் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

விண்ணப்பதாரிகள் தம்மை அடையாளப்படுத்துவதற்காக கீழ்வருவனவற்றுள் ஏதாவதொன்றை அவசியம் கொண்டுவருதல் வேண்டும்.

1.தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரியின் புகைப்படம், அஞ்சல் அடையாள அட்டை

மேலதிக தகவல்களுக்கு, கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் 0112363759 தொடர்பு கொள்ளலாம் என்று பொதுச் செயலாளர் க.க.உதயகுமார் அறிவித்துள்ளார்.

## மின் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 19

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை -

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

உப்புமாவெளி, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி, கொக்கிளாய், குமுழமுனையின் சில பகுதிகள் ஆகிய இடங்களிலும் -

**வவுனியா பிரதேசத்தில் -**

பட்டாணிச்சூர் கிராமம், ஆண்டியப்புளியங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம்தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# ஜெனீவாவில் இலங்கையை காட்டிக் கொடுக்கக்கூடாது

## எச்சரிக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, மார்ச் 19

இலங்கையை ஜெனீவாவில் காட்டிக் கொடுக்கக்கூடாது என்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கவுள்ளதாக இலங்கை அரசு கூறியுள்ள நிலையிலேயே, மஹிந்த நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அண்மைய அறிக்கையும், இதற்கு முந்திய ஆண்டுகளில் வெளியிட்ட அறிக்கைகளும், இலங்கையை ஓர் இறைமையுள்ள நாடா என்ற கேள்வியை எழுப்ப வைக்கின்றன.

30/1 தீர்மானம், ஆயுதப்படைகளையும் போர்க்காலத் தலைவர்களையும், வெளிநாடுகளின் நலன்களுக்காகக் காட்டிக் கொடுக்கின்ற ஒன்று.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்க முடியாது என்றும், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் 2015 செப்ரெம்பர் 18ஆம் திகதி வெளியிடப்பட்ட 30/61 இலக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், அதன் பரிந்துரைகளான, வெளிநாட்டுச் சட்டவாளர்களின் பங்கேற்புடன் கலப்பு விசாரணை நீதிமன்றங்களை அமைக்க முடியாது என்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கும், ஏனைய உறுப்பு நாடுகளுக்கும் அரசு தெளிவாக கூறவேண்டும்.

இந்த விடயங்கள் இலங்கை மக்களைக் காட்டிக் கொடுக்கும் செயல் என்பதை ஜெனீவாவுக்குச் செல்லும் இலங்கை அரசின் பிரதிநிதிகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ)




## இறை விசுவாசம் எம்மை வாழ வைக்கும்

இறைவன் இல்லையென்றும், மனிதனே உலகின் விருத்திக்கு காரணம் என்று எதிர்வாதம் செய்கிறவர்களே உலகில் அநேகம் பேர். ஆதியிலே இறைவனை மறந்தவன் ஆடம்பரத்திலே ஆண்டவனை மறப்பது ஆச்சரியமானதல்ல. மமதை கண்களை மறைக்கும்போது மரணம் வருமென்று மனிதன் நினைப்பதில்லை. "விசுவசிப்பவனுக்கு எல்லாம் ஆகும்" என்பது இறைவாக்கு. இறந்துபோன இலாசரை இயேசு உயிர்ப்பிக்கும்போது இறந்தவனின் சகோதரி மார்த்தா "ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான். இப்போது கூட நீர் கடவுளிடம் கேட்டால் அவர் உமக்கு கொடுப்பார்" என்று தனது விசுவாசத்தை வெளிப்படுத்தினாள். இயேசு அவனை உயிர்ப்பித்தார். கடவுள் இறைவன் நிறை வல்லமை உள்ளவர். நாம் அதனை ஏற்று அறிக்கையிட்டால் மாத்திரமே இறை அருளைப் பெறலாம்.

தவக்காலத்தில் மட்டுமல்ல. வாழ்நாள் முழுவதும் இறை விசுவாசத்துடன் வாழ்வதற்கு வழிப்படுத்தும் காலமே தவக்காலம். வாழ்ந்தாலும் இறந்தாலும் இறைவனுக்காக வாழும் வாழ்வே வானுலகம் சேர்க்கும். உலகத்தின் போக்கு ஊழித் தீயிலே சேர்க்கும். விழித்துக் ஜெபித்து விசுவாச வாழ்வை வாழ்வோம். தீயவை நம்மைத் தீண்டா. வஞ்சகம் நம்மை வதைக்காது. தஞ்சமென்று இறைவனைச் சரணடைந்தால் அஞ்சிடாமல் எம்மை வாழ வைப்பான்.

- அன்ரனி பீற்றர் -
(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்)

# பாகிஸ்தானைக் கண்டித்து இந்தியர் அமெரிக்க ஹூஸ்டனில் ஆர்ப்பாட்டம்




பாகிஸ்தானைக் கண்டித்து அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 300இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் பங்கேற்றனர்.

கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்புத் தாக்குதல் நடத்தியது. இதில் 40 துணைப்படை வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட பல நாடுகள் ஜெய்ஷ் - இ - முகமது தீவிரவாத அமைப்பின் தலைவர் மசூத் அஸாரை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்க வேண்டும் என்று ஐ.நா.வில் முறையிட்டன. ஆனால் வழக்கம்போல் சீனா அதை தடுத்துவிட்டது. இதற்கிடையில் தாக்குதலை கண்டித்து அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் கடந்த 22ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் 200இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் பங்கேற்றனர்.

**மீண்டும் ஆர்ப்பாட்டம்**

அதைத் தொடர்ந்து ஹூஸ்டன்நகரில் பாகிஸ்தானுக்கு எதிராக நேற்றும். மீண்டும் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் 300இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் கலந்து கொண்டனர்.

## எல்லையில் பாகிஸ்தான் சூடு; இந்திய இராணுவ வீரர் சாவு!

ஸ்ரீநகர், மார்ச்19

எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் அத்து மீறி நடத்தியதாகக் கூறப்படும் துப்பாக்கிச்சூட்டில் இந்திய வீரர் ஒருவர் பலியானார்.

ஜம்மு - காஷ்மீரின் ராஜோரி மாவட்டத்தில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணுவம் நேற்றுக் காலை துப்பாக்கிச்சூடு நடத்தியது என கூறப்படுகின்றது

சுந்தெர்பெனி பிரிவில் நடத்தப்பட்ட அத்துமீறலுக்கு இந்திய இராணுவம் தக்க பதிலடி கொடுத்தது. பாகிஸ்தானின் அத்துமீறிய தாக்குதலில் இந்திய தரப்பில் இராணுவ வீரர் ஒருவர் வீர மரணம் அடைந்தார். மேலும் 3 வீரர்கள் காயம் அடைந்தனர்.

## தமிழகத்தில் வாரிசு வேட்பாளர்கள்

வரும் மக்களவை தேர்தலில் தமிழகத்தின் முதன்மை கட்சிகளாக திகழும் தி.மு.க., அ.தி.மு.க வில் இருந்து வாரிசு வேட்பாளர்கள் பலர் களமிறங்க உள்ளனர். யார் எந்த தொகுதியில் போட்டியிடுகின்றனர் என்று இங்கே காணலாம்.

**அ.தி.மு.க. வாரிசு வேட்பாளர்கள் வருமாறு:-**

* தேனி - துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் மகன் ரவீந்திரநாத்
* தென் சென்னை -அமைச்சர் ஜெயக்குமார் மகன் ஜெயவர்தன்
* திருநெல்வேலி - பி.ஹெச் பாண்டியன் மகன் மனோஜ்பாண்டியன்
* மதுரை - ராஜன் செல்லப்பா மகன் ராஜ்சத்யன்

**தி.மு.க. வாரிசு வேட்பாளர்கள் விவரம் வருமாறு:-**

* தூத்துக்குடி -மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி மகள் கனிமொழி
* வேலூர் - தி.மு.க. பொருளாளர் துரைமுருகன் மகன் கதிர் ஆனந்த்
* வட சென்னை - முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி மகன் கலாநிதி
* மத்திய சென்னை - மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் மாறனின் மகன் தயாநிதி மாறன்
* கள்ளக்குறிச்சி -முன்னாள் அமைச்சர் பொன்முடியின் மகன் கவுதம் சிகாமணி
* தென் சென்னை - முன்னாள் அமைச்சர் தங்க பாண்டியனின் மகள் தமிழச்சி தங்க பாண்டியன்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
புதிய பிரிவுகள் ஆரம்பம் ; 23.03.2019
சனி, ஞாயிறு வகுப்புகள்
காலை 8.30 - 10.00
மாலை 3.00 - 4.30
வார நாள் (செவ்வாய் - வியாழன்) 21.03.2019
01 : காலை 08 - 10 02 : மாலை 03 - 05
3 மாத பயிற்சிக் கட்டணம் ரூபா 3000 மட்டுமே!
16 வயதுக்கு மேற்பட்ட எவரும் இணைய முடியும்
SAMSON Experts in English Training
403. வெலிங்டன் சந்தி. பெருமாள் கோவிலடி. யாழ்.நகர்.
021 222 4282
077 621 4567

# முதல்வர் மரணமடைந்தமையை அடுத்து அரசியல் குழப்பத்தில் சிக்கியது கோவா



கோவாவில் ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநரிடம் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் மனு அளித்துள்ளனர்.

கோவாவில் பா.ஜ.க. சார்பில் முதல்வராக இருந்த மனோகர் பாரிக்கர் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று. முன்தினம் மரணம் அடைந்தார். மனோகர் பாரிக்கர் இறந்தவுடன் இருமுறை கூட்டணிக் கட்சிகள் சேர்ந்து ஆலோசனை நடத்தின. அதன்பின் டில்லியில் இருந்து வந்த மூத்த மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, பா.ஜ.க. கூட்டணி எம்.எல்.ஏக்களைச் சமாதானம் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

ஆனால், கூட்டணிக் கட்சியில் ஒன்றான மகாராஷ்டிராவாடி கோமந்தக் கட்சியும், கோவா முன்னணிக் கட்சியும் முதல்வர் பதவியைக் கேட்டு வருகின்றமையால், பேச்சு இழுபறியில் நீடித்து வருகிறது.

இதற்கு மத்தியில், பா.ஜ.க பெரும்பான்மைக்கு போதிய எண்ணிக்கை இல்லை எனக் கூறிவரும் காங்கிரஸ், ஆளுநர் மிருதுளா சின்காவைச் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரிமனு அளித்துள்ளது.

40 தொகுதிகளை கொண்ட கோவாவில், 14 எம்.எல்.ஏக்களை கொண்ட காங்கிரஸ் தனிப்பெரும் கட்சியாகவிளங்குகிறது. பா.ஜ.க.ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் எண்ணிக்கை 12 ஆகக் குறைந்துள்ளது. அதே நேரத்தில் தற்போது 4 தொகுதிகள் காலியாக உள்ளன.

ஆளுநர் மிருதுளா சின்காவை சந்தித்த பிறகு, செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த காங்கிரஸ் எம்.எல்.ஏ சந்திரகாந்த் கவேல்கர் கூறுகையில், ஆளுநரைச் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரியுள்ளோம். நாங்கள்தான் தனிப்பெரும் கட்சியாக உள்ளோம். எங்களிடம் 14 எம்.எல்.ஏக்கள் உள்ளனர். எனவே, எங்களைத்தான் முதலில் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்க வேண்டும். நாங்கள் பெரும்பான்மையை நிரூபிக்கத் தயாராக உள்ளோம் எனவும் அவரிடம் கூறியுள்ளோம். - என்றார்.

## ஸ்டாலினுக்கு கனிமொழி புகழாரம்!

சென்னை, மார்ச் 19

மறைந்த முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் இடத்தை நிரப்பும் ஒரே தலைவராக மு.க.ஸ்டாலின் செயற்படுகிறார் என தி.மு.க அமைச்சரான கனிமொழி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்து போராடிய மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தக்கூடிய மிக மோசமான சூழ்நிலையை நாம் சந்தித்தோம்.

பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி யால் தூத்துக்குடியில் சிறு தொழில்கள், வியாபாரம் என்பன முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு பெண்களும், இளைஞர்களும் வேலை இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் கிராமப்புற மக்களுக்கு பல ஆண்டுகளாக அடிப்படை வசதிகள்கூட செய்து தரவில்லை. எனவே அங்கு பெரிய மாற்றத்தை கொண்டுவர முடியும் என்று நான் நம்புகிறேன் - என்றார்.

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
Courier & Cargo
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்
CNR world wild express
இல - 101, மணிக்கூட்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 0215674145 0772931362
Follow us:cnrworldwideexpress

VIP CCTV
077-3767899
30%
விலைக்கழிவு

# நியூஸிலாந்து மசூதிச் சூட்டு சூத்திரதாரி ஒன்லைனில் துப்பாக்கி வாங்கினாராம்!



நியூஸிலாந்தில் மசூதியில் துப்பாக்கிச் சூடு நடத்திய பிரெண்டன் டாரன்ட் ஒன்லைனிலிருந்து துப்பாக்கி வாங்கியிருக்கிறார் என அந்நாட்டைச் சேர்ந்த துப்பாக்கி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நியூஸிலாந்தில் கிறைஸ்ட்சேர்ச் நகரில் உள்ள அல்நூர் மசூதி மற்றும் லின்வுடன் பகுதியில் உள்ள மசூதிகளில் கடந்த வெள்ளிக்கிழமையன்று முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றனர். இதில் 49 பேர் பலியாகினர். ஏராளமானவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் கைது செய்யப்பட்ட முக்கியக் குற்றவாளியான பிரெண்டன் டாரன்ட், கிறைஸ்ட்சேர்ச் மாவட்ட நீதிமன்றத்தில் சனிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்நிலையில் டாரன்ட் ஒன்லைனில் ஆயுதங்கள் வாங்கியுள்ளார் என நியூஸிலாந்தைச் சேர்ந்த துப்பாக்கி நிறுவனமான கன் சிட்டி தெரிவித்துள்ளது.

இது குறித்து நேற்று (திங்கட்கிழமை) கன் சிட்டி கூறும்போது, "கிறைஸ்ட்சேர்ச் துப்பாக்கிச் சூடு நடத்திய டாரண்ட் ஒன்லைனிலிருந்துதான் துப்பாக்கிகள் மற்றும் குண்டுகளை வாங்கியுள்ளார். ஆனால் அவர் கிறைஸ்ட்சேர்ச் துப்பாக்கிச் சூட்டில் பயன்படுத்திய ஆயுதங்கள் ஒன்லைனில் விற்கப்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 லட்சம் மக்கள் தொகை கொண்ட நியூஸிலாந்தில் 10 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் துப்பாக்கிக்கு உரிமம் வைத்துள்ளனர். அங்கு துப்பாக்கி உரிமம் வைத்திருப்பதற்கான ஆரம்ப வயது 16 என்பது குறிப்பிடத்தக்கது.

## 50 பேரின் மரணத்துக்குக் காரணமானவர் தனக்காகத் தானே நீதிமன்றில் வாதிடுவார்



நியூஸிலாந்தில் மசூதியில் துப்பாக்கிச் சூடு நடத்தி 50 பேரின் மரணத்துக்குக் காரணமான சந்தேகநபர் தனக்குத் தானே வாதாட இருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்தேகநபர் பிரெண்டன் டாரன்டுக்கு நியமிக்கப்பட்ட அரசு வழக்கறிஞர் கூறும்போது, "டாரன்ட் மனதளவில் தடுமாறி இருக்கிறார். அவர் 4 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் போது பல குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள இருக்கிறார்" என்றார்.

இந்நிலையில் இந்த வழக்கில் தனக்குத் தானே வாதாட டாரன்ட் திட்டமிட்டிருக்கிறர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறு நேர்ந்தால் அவர் தீவிரவாதக் கருத்துகளை தனது வாதத்தின் மூலம் பரப்புவார் என்று அச்சம் எழுந்துள்ளது.

# இந்தோனேஷிய வெள்ளத்தில் ஐம்பது பேர் வரை உயிரிழப்பு!

## நூறுக்கும் அதிகமானோர் படுகாயம்

இந்தோனேசியாவின் கிழக்கு பப்புவா மாகாணத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சிறிய ரக விமானத்தை பார்வையிடும் கிராமவாசி ஒருவர்.




இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள கடும் மழை மற்றும் வெள்ளத்துக்கு 50 பேர் பலியாகியுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் கிழக்கு பப்புவா மாகாணத்தில் உள்ள சென்டேனி பிராந்தியத்தில் கடந்த சனிக்கிழமை முதல் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, அங்குள்ள பல்வேறு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால், அங்கு வசிக்கும் மக்கள், வீட்டிலிருந்து வெளியேற முடியாத சூழல் ஏற்பட்டது.

மேலும், மழை வெள்ளத்தில் நூற்றுக்கணக்கான வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் இராணுவத்தினரும், பேரிடர் மீட்புப் படையினரும் ஈடுபட்டுள்ளனர். எனினும், மழை தொடர்ந்து பெய்து வருவதால் மீட்புப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக சென்டேனி பிராந்தியத்தில் 500இற்கும் மேற்பட்ட நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் தற்போது சுமார் 50 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர் எனக் கூறப்படுகிறது. அவர்களுக்குத் தேவையான உணவு, மருந்துப் பொருள்களை வழங்கும் பணிகள், போர்க்கால அடிப்படையில் நடந்து வருகின்றன என இந்தோனேஷியா அரசு தெரிவித்துள்ளது.

# எத்தியோப்பியாவில் போயிங் ஜெட் விமான விபத்துக்கு சமநிலைப்படுத்தும் கருவியின் செயல் தவறே காரணம்?



எத்தியோப்பியாவில் போயிங் 737 மேக்ஸ் – 8 ஜெட் விமானம் விபத்துக்குள்ளான சம்பவத்தில் இதற்கு முன்னர் நடந்த மற்றொரு விபத்திலும் தொடர்புடைய முக்கிய காரணத்தை வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

எத்தியோப்பியா நாட்டு அரசுக்கு சொந்தமான '737' ரக போயிங் விமானம் கடந்த பத்தாம் தேதி காலை அடிஸ் அபாபா நகரில் இருந்து 149 பயணிகளுடன் கென்யா தலைநகரான நைரோபி நோக்கி புறப்பட்டு சென்றது.

வானில் உயர எழும்பிய அந்த விமானம் 6 நிமிடங்களுக்குள் தரையில் உள்ள கட்டுப்பாட்டு அறையுடனான தகவல் தொடர்பை இழந்தது. அந்த விமானம் கீழே விழுந்து நொறுங்கியதில் 149 பயணிகள் மற்றும் விமானிகளுடன் 8 பணியாளர்கள் உட்பட 157 பேர் உயிரிழந்தனர்.

இந்த விமானத்தின் கறுப்புப்பெட்டி கண்டுபிடிக்கப்பட்டு, பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள ஆய்வுக்கூடத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதில் உள்ள குரல் பதிவுகளின் அடிப்படையில் விபத்துக்கான காரணம் என்ன என்பது அதிகாரபூர்வமாக தெரியவரும்.

இதற்கிடையில், விபத்துக்குள்ளான இந்த விமானம் விழுந்து நொறுங்கிய இடத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட சிறு தடயத்தின் அடிப்படையில் இந்தக் கோர விபத்துக்கான காரணம் இதுவாகவும் இருக்கலாம் என விமானப் போக்குவரத்து துறை சார்ந்த வல்லுநர்களும், பொறியாளர்களும் தீர்மானித்துள்ளனர்.

பொதுவாக, நவீன போயிங் ஜெட் ரக விமானங்கள் விண்ணில் உயரக்கிளம்பி பறக்கும்போதும், மிருதுவாக தரையிறங்கும்போதும் வால் பகுதியில் உள்ள 'ஸ்டேபிலைசர்ஸ்' என்னும் சமநிலைப்படுத்தும் கருவிகள் தான் ஒரு விமானத்தின் மூக்குப்பகுதியை தாழ்த்தவும், உயர்த்தவும் உந்துசக்தியாக செயல்படுகின்றன.

இந்த 'ஸ்டேபிலைசர்ஸ்' கருவியில் பொருத்தப்பட்டுள்ள இரு சென்சார்களில் இருந்து வெளியேற்றப்படும் அதிர்வலைகள் விமானத்தின் மூக்குப்பகுதியை இயக்கி உயரக்கிளம்பவும், தாழ்ந்து இறங்கவும் தேவையான பணியைச் செய்கிறது.

போயிங் 737 மேக்ஸ் – 8 ரக விமானங்களில் உள்ள இந்தத் தானியங்கி 'ஸ்டேபிலைசர்ஸ்' கருவிகள் விமானத்தின் மூக்குப்பகுதியை 10 வினாடிகளில் 2.7 டிகிரி செங்குத்தான கோணத்தில் தரையை நோக்கி திசை திருப்புவதாக முன்னர் தெரியவந்தது. இந்த வேகம் மிக அதிகமானது எனக் கூறப்படுகிறது.

இதற்கு முன்னர் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்தோனேசியாவில் விபத்தில் சிக்கி 189 பேர் உயிரிழக்க காரணமாக அமைந்த லயன் ஏர் விமான விபத்திலும் இதேபோல் நிகழ்ந்துள்ளது.

இந்தோனேசியாவில் விபத்துக்குள்ளான அந்த விமானத்தின் விமானிகள் மிக அதிகமான வேகத்தில் தரையை நோக்கி தாழ்ந்து செல்லும் மூக்குப்பகுதியை நிலைப்படுத்த முயன்றுகொண்டிருக்கும்போதே அந்த விமானம் கீழே விழுந்து நொறுங்கிய தகவல் அவ்விமானத்தின் கறுப்புப் பெட்டியில் இருந்து கிடைத்த விமானிகளின் குரல் பதிவின் மூலம் முன்னர் தெரியவந்தது.

இதேநிலை எத்தியோப்பியாவில் விபத்துக்குள்ளான போயிங் 737 மேக்ஸ் – 8 விமானத்துக்கும் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பத்தகுந்த ஆதாரம் இந்த விபத்து நடந்த பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட 'ஜேக்ஸ் குரு' என்ற பாகத்தின் மூலம் கிடைத்துள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வால் பகுதியில் இருந்து மூக்குப்பகுதியை இயக்கும் இந்த 'ஸ்டேபிலைசர்ஸ்' கருவியின் தவறான செயல்பாட்டால் எத்தியோப்பியா விமானம் விபத்துக்குள்ளாகி இருக்கலாம் என நம்புவதற்கு தேவையான முக்கிய ஆதாரமாக இதை எடுத்துக்கொள்ள முடியாது.

எனினும், எத்தியோப்பியா விமானத்தின் கறுப்புப் பெட்டியில் உள்ள விமானிகளின் கடைசி நிமிடக் குரல் பதிவுகளும் இந்த கருத்தை உறுதிப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



# அழிக்கப்பட்டு வரும் பெருங்கற்கால தமிழரின் தொல்லியல் ஆதாரங்கள்!

இலங்கையின் கிழக்கு மாகாணம் – அம்பாறை மாவட்டத்தின் சங்கமன் கண்டி பிரதேசத்துக்கு அருகேயுள்ள காட்டுப் பகுதியில் காணப்படும், தமிழ் மொழியைப் பேசிய பெருங்கற் பண்பாட்டு மக்கள் வாழ்ந்தமைக்கான தொல்லியல் ஆதாரங்கள் சூறையாடப்பட்டும், அழிவடைந்தும் வருகின்றமையினால், அவற்றைப் பாதுகாப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென, அப்பிரதேச மக்கள் வலியுறுத்துகின்றனர்.

சங்கமன்கண்டி பிரதேசத்தின் பிரதான வீதியிலிருந்து மேற்குப் புறமாக சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்தில், ஏராளமான புராதன சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில சின்னங்கள் கிறிஸ்துவுக்கு முன்னர் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றும், சில சின்னங்கள் கிறிஸ்துவுக்குப் பின்னர் எட்டாம் நூற்றாண்டைச்சேர்ந்தவைஎனவும்அறியப்படுகின்றன.

வரலாற்றுத்துறை பேராசிரியரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வேந்தருமான எஸ். பத்மநாதன், இந்த தொல்லியல் சின்னங்கள் மேற்குறிப்பிட்ட காலங்களுக்குரியவைதான் என்பதை, பி.பி.ஸிக்கு உறுதிப்படுத்தினார்.

மலைகளிலும் மலைகள் அருகே காணப்படுகின்ற



## பாதுகாப்பதற்கான நடவடிக்கையை இனி என்றாலும் எடுக்குமா அரசு?

இந்தப் புராதன சின்னங்கள், இலங்கையின் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும், அவற்றைப் பாதுகாப்பதற்கான போதிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என, அந்தப் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இந்தப் பகுதியில் அடிக்கடி சட்டவிரோதமாக புதையல் தோண்டும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமையினால், அங்கு காணப்படும் பெறுமதிமிக்க புராதன சின்னங்கள் சேதமடைந்தும், அழிவடைந்தும் செல்கின்றன என்று, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கே. தர்மராஜ் பி.பி.ஸி தமிழிடம் தெரிவித்தார்.

இப்பகுதியில் கல்வெட்டுக்கள், நடுகல், கல்லறைகள், பாறைத்தூண்கள், மலை களில் குடையப்பட்ட நேர்த்தியான குழிகள் மற்றும் நீர்த் தொட்டிகள் உள்ளிட்ட ஏராளமான புராதன சின்னங்கள் இன்றும் காணக் கிடைக்கின்றன.

இறந்தவர்களின் நினைவாக அமைக்கப்படும் 'நடுகல்' இங்கு காணப்படுகின்றமையினை பேராசிரியர் பத்மநாதன் உறுதிப்படுத்தியுள்ளதோடு, 'நடுகல்' என்பது, ஆதி இரும்புக்காலம் என்று சொல்லப்படுகின்ற – பெருங்கல் பண்பாட்டுச் சின்னங்களில் ஒன்றாகும் எனவும் கூறியுள்ளார்.

பெருங்கற்கால மக்கள்தான் 'நாகர்'கள் என அழைக்கப்படுகின்றனர் என்றும் பேராசிரியர் பத்தமநாதன் தெரிவித்தார்.

அந்த வகையில் 'நடுகல்' இங்கு காணப்படுகின்றமையினை வைத்து, கிறிஸ்துவுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில், தமிழ் மொழியைப் பேசிய பெருங்கற் பண்பாட்டு மக்கள் இங்கு பரவியிருந்தார்கள் என்பதை திடமாகக் கூறலாம் எனவும் பேராசிரியர் பத்மநாதன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், அங்கே



கிடைக்கப்பெற்ற பானையோடு ஒன்றில் தமிழ் பிராமி எழுத்து காணப்பட்டதாகவும், இதனை தென்னிந்திய ஆய்வாளர்களும் அக்காலத்தில் உறுதி செய்தனர் என்றும் பேராசிரியர் பத்மநாதன் சில வருடங்களுக்கு முன்னர் கூறியிருந்தமையும் நினைவுகொள்ளத்தக்கது.

ஈமத்தலங்களில் அமைக்கப்பட்ட நான்குக்கும் மேற்பட்ட கல்லறைகள் இப் பகுதியில் காணப்படுகின்றன. இவை நீள் சதுரமான வடிவுடையவையாகும். அந்த கல்லறையை நீளமான ஒரு கல்லைக் கொண்டு மூடிவிடுவார்கள். அதனை தொப்பிக் கல் (Dollmen) என்று சொல்வார்கள். இந்த 'தொப்பிக்கல்'கள் இங்கு காணப்படுகின்றமையை வைத்தும், கிறிஸ்துவுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இங்கு தமிழ் மொழிபேசிய மக்கள் வாழ்ந்தமையை உறுதிப்படுத்த முடியும் எனவும் பேராசிரியர் தெரிவித்திருந்தார்.

பெருங்கற்கால மக்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தார்கள் என்றும், அவர்கள்தான் தமிழ் மொழியை இலங்கைக்குக் கொண்டுவந்தனர் என்றும் பேராசிரியர் பத்மநாதன் சுட்டிக் காட்டினார்.

கிடைக்கப்பெற்ற தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், கி.முன்னர் 04 நூற்றாண்டுகளுக்கு முன்னர்தான், தமிழ் – எழுத்து வடிவம் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில், ஆதி இரும்புக்காலம் என்று சொல்லப்படுகின்ற – பெருங்கற் காலத்தில் தமிழ் பேசிய மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்களும், தமிழ் பிராமி எழுத்துக்களும் கிடைக்கப் பெற்றுள்ள இடத்தையும், அங்கு காணப்படுகின்ற தொல்லியல் சின்னங்களையும் பாதுகாக்க வேண்டியமை அரசின் கடமையாகும்.

அனுராதபுரம் மற்றும் பொலநறுவை போன்ற இடங்களிலுள்ள தொல்லியல் சின்னங்களை அரசு பாதுகாத்து வருகின்றமை போல், சங்கமன்கண்டி பிரதேசத்திலுள்ள தொல்லியல் சின்னங்களையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். *

“ சங்க்மன்கண்டி பிரதேசத்தின் பிரதான வீதியிலி ருந்து மேற்குப் புறமாக சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்தில், ஏராளமான புராதன சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில சின்னங்கள் கிறிஸ்துவுக்கு முன்னர் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என் றும், சில சின்னங்கள் கிறிஸ்துவுக்குப் பின்னர் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனவும் அறியப்படுகின்றன. ”

# அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க கடமைகளை பொறுப்பேற்றார்

கொழும்பு, மார்ச் 19

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் புதிய செயலாளராக அட்மிரல் சிறிமவன் ரணசிங்க கடமைகளைப் பொறுப்பேற்றார்.

முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க நேற்று தனது கடமைகளை அமைச்சில் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர் எச்.எம்.எல்.எஸ்.ஹேரத், மேலதிக செயலாளர் கே.என்.குமாரி சோமரத்ன, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் கப்டன் அத்துல ஹேவா விதாரண உள்ளடங்கலாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றிய இணைப்பாளர் பிணையில் விடுதலை

கொழும்பு, மார்ச் 19

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் இணைப்பாளர் மஹில் பண்டார தெஹிதெனிய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று அவரை முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

உத்தேச தீவிரவாத முறியடிப்புச் சட்ட வரைவுக்கு எதிராக நாடாளுமன்ற வீதியில் கடந்த 12ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதன்போது குழப்பம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விக்னேஸ்வரன் தலைமையிலான குழு கிழக்கு மாகாணத்தில் சுற்றுப்பயணம்





மட்டக்களப்பு, மார்ச் 19

கிழக்கு மாகாணத்துக்கு 6 நாள்கள் பயணம் மேற்கொண்டுள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர், அங்கு சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகின் றனர்.

கிழக்கு மாகாண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நேரில் கண்டு ஆராயும் நோக்குடன் அங்கு சென்றிருக்கும் விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் ஞாயிறுக்கிழமை குருமன்வெளி, களுவாஞ்சிக்குடி, கல்முனை ஆகிய இடங்களில் பல்வேறு மக்கள் சந்திப்புக்களில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்புகளின்போது மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தமது பிரச்சினைகள், குறைகள் மற்றும் கவலைகளை எடுத்துக்கூறினர்.

நேற்றுக் காலையில் மட்டக்களப்பு திருகோணமலை மறைமாவட்ட ஆயர், இராமகிருஷ்ணமிசன் சுவாமிகள் ஆகியோரைச் சந்தித்து பேசினார்கள். மாலையில் மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளில் மக்கள் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தர்களான பேராசிரியர் சிவநாதன், அருந்தவபாலன், சோமசுந்தரம், ஆலாலசுந்தரம், ரெஜி, கிருஷ்ணமேனன் உட்பட பலரும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

# தமிழ் மக்களுக்காக பதவி துறக்கத் தயார்

## அமைச்சர் மனோ உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 19

தமிழ் மக்களின் இருப்பைத் த்க்க வைத்துத் தீர்வைப் பெறுவதற்காக இங்குள்ளவர்கள் போராடுவது போன்று அரசுக்குள் இருந்தும் நான் போராடிக் கொண்டிருக்கின்றேன். தமிழ் மக்களுக்காக எனது பதவியையும் தூக்கி எறிந்துவிட்டு வெளியேவரத்தயாராகவே இருக்கின்றேன். ஆகவே ஓர் அரச அமைச்சராக அப்பாவியான என்னைக் குறை கூறாதீர்கள்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன்.

தமிழ் மக்களின் கலை, கலாசாரம் பாதுகாக்கப்பட்டு இருப்பைத் தக்க வைப்பதற்குக் கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் கூட்டிணைந்து செயற்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற கம்பன் விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மொழி, கலை, கலாசாரம், பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் பேணி பாதுகாக்கப்பட்டு இழந்தவற்றை மீட்டெடுத்து உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். இதன் அவசியம் கருதி இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுகின்றமை வரவேற்கத் தக்கது. அதேபோன்று தொடர்ந்தும் இத்தகைய நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டியதும் அவசியம்.

இங்கு எனக்கு முன்னர் பேசிய சுரேஷ் பிறேமச்சந்திரன் பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கூறியிருந்தார். அதிலும் குறிப்பாகத் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகளை விமர்சித்தும் இருந்தார். உண்மையில் அந்தத் திணைக்களம் தொடர்பில் நானும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அதன் செயற்பாடுகள் தொடர்பில் அதன் பணிப்பாளரிடம் பல கேள்விகளையும் நேரடியாகவே கேட்டிருக்கின்றேன்.

அண்மையில் நாடாளுமன்றக் குழுவாக இந்தத் திணைக்களப் பணிப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடினோம். இதன்போது குறிப்பாக வவுனியா வெடுக்கு நாறி மலை, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய இடங்களில் தொல்பொருள் திணைக்களம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் நானும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் நேரடியாகவே பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கேள்விகளையும் எழுப்பியிருந்தோம்.

அந்தத் திணைக்களம் தான்தோன்றித்தனமாகவே செயற்படுகின்றது. அவர்களைப் பொறுத்தவரை இந்த நாடு என்பது சிங்கள பௌத்த நாடு என்ற ஒரே நோக்கம் மட்டும்தான் இருக்கின்றது. அத்தகைய சிங்கள பௌத்த வரலாறுதான் நாட்டுக்கு இருப்பதாகவும் எண்ணுகின்றனர். அதனால் தமிழ் வரலாறுகளை அவர்கள் கவனத்தில் எடுப்பதில்லை.

வடக்கு – கிழக்கில் பௌத்த சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவை பௌத்த அடையாளங்கள், பௌத்த இடங்கள் என்ற தோரணையில் அவர்கள் செயற்படுகின்றனர். ஆகவே அவ்வாறு பௌத்த சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவை சிங்கள பௌத்த சின்னங்கள் அல்ல என்றும் தமிழ் பௌத்த சின்னங்கள் என்றும் நாம் சொல்லவேண்டும்.

ஆகவே தான் இந்த நாட்டுக்குச் சிங்கள பௌத்த வரலாறு இருப்பது போன்று தமிழ் வரலாறும் உண்டு என்று நாங்கள் கூறுகின்றோம். அத்தோடு சிங்கள பௌத்த வரலாறு மாத்திரம் தான் இந்த நாட்டுக்கு இருக்கின்றதென்பதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்று எதிர்பார்க்கவேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

தனிநாடா, சமஷ்டியா, 13 ஆவது திருத்தமா எனப் பல்வேறு கேள்விகள் இருக்கின்ற நிலையில் கலாசார, பாரம்பரிய, பண்பாட்டு விழுமிய ரீதியாக இருப்பைத் தக்க வைக்கவேண்டும். அத்தோடு தமிழர்களுக்கு இந்த நாட்டில் வரலாறு இருக்கின்றதென்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். இதற்கமையவே கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் எனது அமைச்சினூடாக இலங்கை வரலாறுகள் அடங்கிய ஒரு நூலை வெளியிட்டிருக்கின்றேன்.

அந்த நூலை மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க , இரா.சம்பந்தன் ஆகியோர் முன்னிலையில் வெளியிட்டு அதன் பிரதிகளையும் அவர்களுக்கு வழங்கினோம். தமிழ் மக்களின் வரலாறுகளை உள்ளடக்கிய அந்த நூலைச் சம்பந்தனிடம் கொடுத்த பின்னர் அது தொடர்பில் அவர் என்னைப் பாராட்டி வாழ்த்துவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அப்படி ஏதும் செய்யவில்லை.

அவ்வாறு ஆவலோடு எதிர்பார்த்த நிலையில் நேரடியாகச் சந்தித்த போதும் கூட நூல் தொடர்பில் அவர் எதனையும் கூறவில்லை. ஆக அவர் அந்த நூலைப் படித்தாரோ என்று தெரியவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனாலும் இந்த நூலை தற்போது சிங்களத்தில் மொழி பெயர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு செய்கின்றபோது எதிர்ப்புக்கள் வரலாம். அது பிரச்சினையல்ல. எந்த எதிர்ப்புக்களையும் எதிர்கொள்ள நான். தயாராகவே இருக்கிறேன்.

சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனை என்பது இன்று நேற்று வந்த சிந்தனை அல்ல. அது நீண்ட காலமாகவே அவர்களிடமிருக்கின்ற ஒரு சிந்தனை தான். இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்ற சிந்தனையின் அடிப்படையில் இந்த நாட்டுக்கு முழுமையான சொந்தக்காரர்கள் தாம் தான் என்ற ஒரே எண்ணப்பாடு அன்றிலிருந்து இன்றுவரை அவர்களிடம் இருக்கின்றது.

ஆக இதனை தற்போதைய அரசு மாத்திரம் தான் உறுதிப்படுத்துவதாக நினைக்கக்கூடாது. நாட்டில் ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்களும் இதனைத்தான் செய்கின்றார்கள். இதனையே இங்குள்ள பலரும் எதிர்க்கின்றனர்.



அரசிற்குள்ளே இருந்து கொண்டு நானும் எதிர்த்து வருகின்றேன். நாங்கள் அரசின் அமைச்சர்கள் தான். ஆனால் தமிழ் மக்களின் பல பிரச்சினைகளுக்காக நீங்கள் வெளியே இருந்து போராடுகின்றீர்கள், நாங்கள் அரசுக்கு உள்ளே இருந்து போராடுகின்றோம். ஆகவே எங்கள் இலக்குகள் ஒன்று தான். ஆகையால் அரசுக்குள்ளே இருக்கின்ற அமைச்சர் வந்துவிட்டார் என்று அப்பாவியான என்னைக் குறை சொல்லக்கூடாது.

இதற்காக நானும் பதவிகளைத் தூக்கியெறிந்து விட்டு வெளியே வரலாம். அவ்வாறு அரசில் இருந்து வெளியே வருவதற்குத் தயாராகத் தான் இருக்கின்றேன். ஆனால் அவ்வாறு வந்தால் அடுத்து என்ன செய்வது என்ற நிலையும் உள்ளது. ஆகவே எமது செயற்பாடுகள் அனைத்தும் கூட்டிணைக்கப்படவேண்டியது மிக மிக அவசியமானது.

இதனூடாக எமது கலை, கலாசார, விழுமியங்களை, பாரம்பரியங்களை பாதுகாத்து இருப்பை தக்க வைக்கவேண்டும். அந்த இருப்பை உறுதிப்படுத்துவதற்கு தனிநாடு, சமஷ்டி, வடக்கு – கிழக்கு இணைப்பு என ஏதாவது வரலாம். அவ்வாறு ஏதாவது வந்தால் தமிழர்கள் தமிழர்களாக வாழ்வதற்கான இருப்பை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஆகவே தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்கக் கட்சி பேதமில்லாமல் தமிழர்களாக நாங்கள் அனைவரும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைய வேண்டும் – என்றார். (ஐ – 07)

## பால்மாவுக்கு தட்டுப்பாடு

பால்மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுவது போல் காண்பித்துக்கொள்வதற்காக ஒரு சில வர்த்தகர்கள் பால்மாக்களை பதுக்கி வைத்துள்ளனரெனவும், இது தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் நுகர்வோர் அதிகாரசபைத் தெரிவித்துள்ளது.

பதுக்கிவைக்கப்பட்டிருக்கும் பால்மா தொடர்பில் ஆராய, விசேட வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், பால்மாக்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் நுகர்வோர் அதிகார சபை மேலும் கூறியுள்ளது. (ஐ)

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு இம்மாத இறுதியில்!

கொழும்பு, மார்ச் 19

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த இது தொடர்பாக தெரிவிக்கையில், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்குத் தேவையான பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறினார்.

கடந்த டிசெம்பர் மாதம் நாடு முழுவதிலும் 4 ஆயிரத்து 661 மத்திய நிலையங்களில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 10 கிலோ கேரள கஞ்சாவுடன் செம்மணியில் மூவர் சிக்கினர்!

*யாழ்ப்பாணம், மார்ச் 19*

*செம்மணிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 கிலோ கேரளக் கஞ்சாவுடன் 3 பேரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*உடுத்துறைப் பகுதியைச் சேர்ந்த 3 பேரே கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*நேற்று முன் தினம் இரவு 10 கிலோ கேரளக் கஞ்சாவை கைமாற்றவதற்கு வருகை தந்தபோதே, யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் 3 பேரும் கைது செய்யப்பட்டனர்.*

*கைது செய்யப்பட்ட 3 பேரிடமும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமையுடன், 3 பேரையும் யாழ். நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளனர். (ஐ).*

## 14 பாடசாலைகளைத் தரமுயர்த்த வடமாகாண ஆளுநர் நடவடிக்கை

வடக்கு மாகாணத்தின் 14 மாகாணப் பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்துவதற்கான கோரிக்கையை மத்திய கல்வி அமைச்சுக்கு வழங்குவதற்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தீர்மானித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் பல பாடசாலைகளின் பழைய மாணவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தமது பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்துவதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை அண்மைக்காலமாக ஆளுநரிடம் முன்வைத்து வருகின்ற நிலையிலேயே ஆளுநர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

ஏனைய எட்டு மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்தின் தேசிய பாடசாலைகள் 2 சதவீதமாகக் காணப்படும் அதேவேளை, ஏனைய மாகாணங்களின் தேசிய பாடசாலைகள் 3.5 சதவீதமாகக் காணப்படுவதனால், வடக்கு மாகாணத்தின் தேசிய பாடசாலைகளையும் சராசரியாக 3.5 சதவீதமாகக் கொண்டுவரும் நோக்கில் 14 பாடசாலைகளைத் தரமுயர்த்துவதற்கு ஆளுநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் அந்த 14 பாடசாலைகளும் மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் கட்டாயம் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டுமென்றும் அவற்றைத் தெரிவு செய்து அனுப்பும் பொறுப்பு அந்தந்த மாவட்டங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கே உள்ளதெனவும், அவர்கள் கூடிய விரைவில் பாடசாலைகளை தெரிவு செய்து தனக்கு அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# பரபரப்பான ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் வெற்றி



மன்னார் உதைபந்தாட்ட சம்மேளத்தின் அனுமதியோடு சாவற்காடு கில்லறி வி.க தனது 20வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தும் கில்லறி கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து சாந்திபுரம் குரோஸ்ரார் அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் 01:00 என்ற கோல் கணக்கில் வதிரி டயமன்ஸ் அணி வெற்றி பெற்று லீக் சுற்றுக்கு தகுதி பெற்றது.

டயமன்ஸ் அணி சார்பாக லக்கி ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்.



# இறுதிவரை போராடியது செரண்டீப்

நடப்பாண்டிற்கான பிரிவு 01 உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இலங்கை பொலிஸ் அணியை எதிர்த்து மாவனல்லை செரண்டீப் அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் 02:01என்ற கோல் கணக்கில் பொலிஸ் அணி வெற்றி பெற்று பிரிவு 01 கிண்ணத்தைக் கைப்பற்றியது.

எனினும் இறுதி ஆட்டத்தில் மோதிய இரு அணிகளும் டயலொக் சம்பியன் லீக் தொடருக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

செரண்டீப் அணியில் அமல்ராஜ், ஜெகன், றஞ்சா ஆகிய வடக்கைச் சேர்ந்த வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

# அரையிறுதிக்கு தகுதி பெற்றது ஊரெழு றோயல் வி.க. அணி



அரியாலை சுதேசிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ் லீக்கின் அனுசரணையுடன் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பதிவு செய்யாததால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையும் சமநிலையாக நாணயச் சுழற்சி முறை மூலம் வெற்றிபெற்று அரையிறுதி சுற்றுக்குத் தகுதிபெற்றது றோயல் அணி.

# தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அடுத்ததாக மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடவுள்ளது.

இத்தொடருக்கான தென்னாபிரிக்கா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் போட்டியில் மட்டும் அணித்தலைவர் டுபிளெஸிஸ், குயிண்டன் டி கொக், இம்ரான் தஹீர் மற்றும் கார்கிஸோ ரபாடா ஆகியோர் விளையாடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது மற்றும் மூன்றாவது ரி - 20 போட்டிகளுக்கு ஜே.பி.டுமினி அணித்தலைவராக செயற்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்போட்டிகளில் கிறிஸ் மோரிஸ் மற்றும் லுதா சிம்பாலா ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

அணியின் ஆரம் பத் துடுப்பாட்ட வீரரான அஷிம் அம்லா, குடும்ப சூழ் நிலைக் காரணமாக இத்தொடரிலிருந்து விலகியுள்ளார்.

20 வயதான துடுப்பாட்ட வீரர் சைனெந்தெம்பா கியூசெய்ல் இத் தொடரில் அறிமுகமாகிறார்.

டு பிளெஸிஸ் தலைமையிலான அணியில், குயிண்டன்டிகொக், ஜே.பி. டுமினி,ரீஸாஹென்ரிக்ஸ், இம்ரான் தஹீர், எய்டன் மார்க்கிரம், டேவிட் மில்லர், லுங்கி இங்கிடி, எய்ன்ரிச் நோர்ட்ஜ், என்டில் பெலுக்வாயோ, டுவைன் பிரிடோரியஸ், கார்கிஸோ ரபாடா, டேல் ஸ்டெயின்,ராஸ்ஸிவெண்டர்டஸன்ஆகியோர் இம்பெற்றுள்ளனர்.

ஜே.பி.டுமினி தலைமையிலான அணியில் ரீஸா ஹென்ரிக்ஸ்,டேவிட் மில்லர், கிறிஸ்மோரிஸ்,எய்ன்ரிச்நோர்ட்ஜ்,என்டில்பெலுக்வாயோ, டுவைன் பிரிடோரியஸ், சைனெந்தெம்பா கியூசெய்ல், டப்ரைஸ்சம்ஸி,லுதோசிம் பாலா, டேல் ஸ்டெயின்,ராஸ்ஸி வெண்டர் டஸன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.


## YARL SMART இனால் நடத்தப்படும் சித்திரப்போட்டி

எதிர்வரும் 22.03.2019 அன்று உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் உலக நீர்த் தினத்தை முன்னிட்டு **YARL SMART WATER SOLUTION** நிறுவனத்தினால் சித்திரப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. இதில் 15 வயதிற்கு உட்பட்டவர்கள் பங்கு பெற்ற முடியும். உங்கள் ஓவியத்துடன் பெயர், முகவரி, பாடசாலை, தரம், தொலைபேசி இலக்கம் மற்றும் உங்கள் வயதினை உறுதிப்படுத்தும் வகையில் பாடசாலை அதிபரின் கையொப்பம் என்பன இணைக்கப்பட வேண்டும்

இதில் வெற்றிபெறுபவருக்கு பெறுமதி மிக்க பரிசில் வழங்கப்படும் **YARL SMART WATER SOLUTION, 319, k.k.s Road, Jaffna** என்ற முகவரிக்கு உங்கள் ஓவியத்தை 21.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்

ஓவியத்தின் தலைப்பு - **சுத்தமான நீர் சுகமான வாழ்வு**

அளவு - **29 cm x 21cm**

1 ஆம் பரிசு - **42,000/=** பெறுமதியான **YARL SMART WATER FILTER**

2 ஆம் பரிசு - **Water Dispenser**

3 ஆம் பரிசு - **Water Dispenser**

பெயர் :-

முகவரி :-

பாடசாலை :-

தரம் :-

தொலைபேசி இலக்கம்:- ..............................

அதிபர் கையொப்பம்

**Yarl Smart Water Solution (Pvt) Ltd**

Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410

No.319,K.K.S Road,Jaffna. / Karadippokku Junction,A9 Road,Kilinochchi.


# ரொனால்டோவுக்கு முதலிடம்!





ஈ.எஸ்.பிஎன். நிறுவனம் வருடம்தோறும் விளையாட்டு உலகில் பிரபலமானவர்களை அவர்களது ஒப்பந்த வருமானம் மற்றும் சமூக வலைத்தளங்களில் பின்பற்றுவோரை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடும் பட்டியலை வெளியிடுகிறது. 2019 ஆம் ஆண்டுக்கான பட்டியல் வெளியாகியது.அதில் முதலிடம் பிடித்தார் ரொனால்டோ.

# சென்.நீக்கிலஸ் அபாரம்

அரியாலை சுதேசிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ் லீக்கின் அனுசரணையுடன் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்குத் தகுதிபெற்றது சென்.நீக்கிலஸ் அணி.



## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்தால் கிழக்கு இன்று முழுமையாக ஸ்தம்பிக்கும் எனக் கூறப்படுகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக சமூகம் முழுமையான ஆதரவை வழங்குகின்றது.

– இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் இலங்கையில் நீண்ட காலமாக கட்டமைக்கப்பட்ட ரீதியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்தகைய அடக்குமுறைகள் இலங்கைத்தீவில் திட்டமிடப்பட்ட ரீதியிலான – தமிழ் மக்களிற்கு எதிரான – இனச்சுத்திகரிப்பாகவே உள்ளன.

அத்தகைய இனச்சுத்திகரிப்பின் உச்சமே இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டும் காணாமலாக்கப்பட்டும் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இன அழிப்பாகும்.

போர்க்குற்ற மீறல்கள், மனித உரிமைச் சட்ட மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள்களுக்குரிய பரிகார நீதியைச் சர்வதேசம் தமிழ் மக்களுக்குப் பெற்றுத்தர நாம் விழிப்போடு மக்கள் எழுச்சிப் போராட்டங்களினை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது.

ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலினால் 2015இல் முன்மொழியப்பட்ட நிலைமாறு காலநீதிப் பொறிமுறைக்கு ஊடான உள்ளக பொறிமுறைகளையே இலங்கை அரசு நிறைவேற்ற தவறிய நிலையிலும் ஏற்கனவே கால அவகாசங்கள் வழங்கப்பட்ட நிலையிலும் மீண்டும் கால அவகாசமே வழங்கப்படவுள்ளது. இதனை வெறும் கண்துடைப்பு நாடகமாகவே நாம் நோக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரி இன்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவுள்ள மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் முழுமையான ஆதரவை வழங்குகின்றது.

இவ்வகையில் நீதி கோரி இடம்பெற இருக்கும் மக்கள் எழுச்சிப்பேரணியில் அனைத்துத்தமிழ் பேசும் மக்களும் பங்கு பற்றி முழுமையான ஒத்து ழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் – என்றுள்ளது. (ஐ)

## கொழும்பு சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர். மேலும் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் வான் ஒன்றின் மீது எதிர்த்திசையில் வந்த டிப்பர் ரக வாகனம் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 1.45 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் வானில் பயணித்த 8 பேர் மற்றும் வீதியில் பயணித்த ஒருவர் பலத்த காயங்களுடன் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதில் வானில் பயணித்த மூவரும் வீதியில் பயணித்த ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த மதியாபரணம் பரமேஸ்வரி (வயது – 69), மானிப்பாய் சுதுமலையைச் சேர்ந்த சிவானந்தன் சரோஜினி (வயது –53) ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், வீதியில் நின்ற புத்தளத்தளத்தைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்துள்ளார். மற்றைய பெண்ணின் விவரம் கிடைக்கவில்லை.

விபத்தில் காயமடைந்தவர்கள் தொடர்ந்தும் புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் தீர்க்கமான அரசியல் தீர்மானமொன்றை எடுக்கவுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அந்த முடிவு கொழும்பு அரசியலில் திருப்புமுனையாக அமையும் எனவும் கூறப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவதற்கு குமார வெல்கம எம்.பி. போர்க்கொடி தூக்கியிருந்தாலும், கடும் எதிர்ப்பையும் மீறிக் கோட்டாவை களமிறக்கும் தீர்மானத்துக்கு ராஜபக்ஷாக்கள் வந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இந்தத் தீர்மானம் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், குமார வெல்கம, மஹிந்த அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் வகையில் அரசியல் தீர்மானமொன்றை எடுப்பார் என அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனநாயகத் தலைவர் ஒருவரே நாட்டை ஆளவேண்டும், இராணுவத்தில் இருந்தவர்களுக்கு இடமளிக்கமுடியாது. தேசிய உடை அணிந்தவரே அதற்கு பொருத்தம். – என்றெல்லாம் குமார வெல்கம கடந்த காலங்களில் கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட உபகுழுக் கூட்டத்தில் பங்கேற்ற அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான – இராணுவத்தைப் பாதுகாக்கும் – அமைப்பினருக்கும் புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதையடுத்து, சரத் வீரசேகர தலைமையிலானகுழுவினர் இடை நடுவில் வெளிநடப்புச் செய்தனர்.

பசுமை தாயகம் அமைப்பு ஏற்பாடு செய்த இலங்கை தொடர்பான விசேட அமர்வு நேற்று ஜெனீவாவில் குழு அறையில் நண்பகல் 12 மணியிலிருந்து 1 மணிவரை நடைபெற்றது. இதில் இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான சுமந்திரன், சிவாஜிலிங்கம் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகளான அருட்தந்தை இம்மானுவேல், சுரேன் சுரேந்திரன் மற்றும் தென்னிலங்கையின் இராணுவத்தைப் பாதுகாக்கும் அமைப்பின் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். அத்துடன் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறப்படவேண்டும் என்றும், குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படவேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது விசனமடைந்த இராணுவத்தைப் பாதுகாக்கும் அமைப்பின் பிரதிநிதி அட்மிரல் சரத் வீரசேகர இராணுவத்தினர் மீது குற்றம்சாட்டுவதை ஏற்க முடியாது என்றும் இராணுவத்தினரே யுத்தத்துக்குப் பின்னரான மீட்புப் பணிகளை முன்னெடுக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து சரத் வீரசேகர தலைமையிலான இராணுவத்தை பாதுகாக்கும் அமைப்பினருக்கும் புலம்பெயர் அமைப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. மேலும் நிகழ்வில் சர்ச்சை நிலையும் தோன்றியது. நிகழ்வை நடத்தியவர்கள் சர்ச்சை நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த போதிலும் வாக்குவாதம் தொடர்ந்தது. இதனையடுத்து சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் இடைநடுவில் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர். (ஐ)

## வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடுக்கப்படவில்லை. இரு கட்சிகளும் இது தொடர்பில் பேச்சு நடத்துகின்றன. அந்தப் பேச்சு சுமுகமாகப் போகின்றது. இறுதியில் தீர்க்கமான முடிவெடுக்கப்படும்.

– இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடாலடியாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய களமிறங்குவார் என்றும், அதற்கு மஹிந்த ராஜபக்ஷ இணங்கியிருக்கின்றார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்பு கொழும்பு அரசியலில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தனித்துவத்தை இழந்துவிட்டுப் பொது எதிரணியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைப்பதற்குத் தாம் தயாரில்லை எனவும், மைத்திரிபால சிறிசேனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் எனவும் அந்தக் கட்சியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, சர்வதேச ஊடகம் ஒன்றின் கேள்விக்குப் பதிலளிக்கும்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்பதில் இழுபறி தொடர்கின்றது. முதலில் அது தொடர்பில் முடிவெடுக்கப்படும். அதன் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

எந்தத் தேர்தலையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி – ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணைந்து சந்திக்க வேண்டும் என்பதே இரு கட்சிகளிலும் உள்ள பெரும்பாலானவர்களின் கோரிக்கையாக உள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாம் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றோம். அவசரப்பட்டு முடிவெடுக்கமாட்டோம் – என்றார். (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் பிரிவின் முன்னாள் செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை கொழும்பில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையில் 2018 ஒக்ரோபர் 26ஆம் திகதி நடைபெற்ற சம்பவங்களின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைவரும் செயற்பட்ட விதம் குறித்து தனது பாராட்டுக்களை ஜெப்ரி பெல்ட்மன் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன் –

தமிழ் மக்கள் எப்போதும் அரசமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தவர்கள். குறுகிய அரசியல் இலாபங்களுக்காகச் செயற்படாமல் கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றியவர்கள்.

மேலும் அரசமைப்புச் சபையானது உயர் பதவிகளுக்கு நபர்களை நியமிக்கின்றபோது மிகவும் அவதானத்துடன் செய்யப்பட்டமையானது அரசமைப்புக்கு முரணான சம்பவங்களை இந்த நாட்டின் உயர்நீதிமன்றங்கள் அனுமதிக்காமைக்கு முக்கிய காரணமாகவும் அமைந்தது – என்றார்.

### ஐ.நா. தீர்மானம்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன்,

காணாமல்போனோருக்கான அலுவலகம், நட்டஈடு அலுவலகம் மற்றும் உண்மை நல்லிணக்க அலுவலகம் போன்றவை மக்கள் மத்தியில் செயற்படுவது அவசியம். அத்தகைய அலுவலகங்கள் உண்மையை நிலைநாட்டும் முகமாகத் தொடர்ச்சியாக மக்களுடன் தொடர்பில் இருக்கவேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைப்பது மாத்திரமல்லாது அரசும் ஏனைய மக்களும் தங்கள் நிலைமை குறித்து கரிசனையாக உள்ளார்கள் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளும் முகமாக அரசின் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

அரசும் சில அரசியல்வாதிகளும் இதனை தமிழ் – சிங்கள பிரச்சினையாக உருவாக்க முயற்சிக்கின்றனர். இது அத்தகைய பிரச்சினை அல்ல. மாறாக இது அடிப்படை மனித உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும் என்று சுட்டிக்காட்டினார்.

### புதிய அரசமைப்பு

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஜெப்ரி பெல்ட்மனிடம் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன்,

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்குப் பிற்பாடு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இந்த விடயம் தொடர்பில் அநேக கருமங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால், அரசியல் விருப்பும் உத்வேகமும் இல்லாமையும் அரசியல் ரீதியாக இருக்கின்ற செல்வாக்கை இழந்து விடுவோம் என்ற பயமும் அரசியல்வாதிகள் மத்தியில் காணப்படுகின்றன.

தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளைத் தீர்ப்பது தலைவர்களின் கடமையாகும். அரசியல் விருப்பம் இல்லாமையானது சுதந்திரத்துக்குப் பின்னர் இந்த நாடு முன்னேற்றகரமான பாதையில் செல்வதற்குத் தடையாக உள்ளது.

### அரசியல் தீர்வும் வாக்குறுதியும்

தமிழ் மக்கள் தாம் எப்போதும் ஏமாற்றப்படுகிறார்கள் என உணர்கின்றார்கள். அவர்கள் இனியும் ஏமாறத் தயாரில்லை. அவர்களுக்குச் சரியானதைச் செய்வது தொடர்பில் சிங்களத் தலைவர்கள் பின்வாங்குகிறார்கள். இது தொடர்பில் சர்வதேசம் சமூகம் கூடிய கரிசனை கொள்வேண்டும்.

மேலும் பிரிக்க முடியாத – பிரிபடாத – ஒருமித்த நாட்டுக்குள் நியாயமான ஓர் அரசியல் தீர்வையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தமிழ் மக்கள் தமது சொந்த வரலாற்றையும் பாரம்பரியங்களையும் கொண்ட தனித்துவமான மக்கள். எமது அடிப்படை உரிமைகளையே நாங்கள் கேட்கின்றோம். இன்று இந்த நாட்டில் எமது விருப்பத்துக்கு மாறாக நாம் ஆளப்படுகின்றோம்.

இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற சர்வதேச அழுத்தம் மேலும் தேவை. எனவே, இலங்கை அரசின் வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக இலங்கை தொடர்பான பிரச்சினையை சர்வதேச மட்டத்தில் எடுத்துச் செல்லுங்கள் என்று ஐ.நாவின் முன்னாள் அரசியல் பிரிவுச் செயலாளர் நாயகத்திடம் இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டார். (ஐ)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது கூட்டத் தொடரில் நாளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பான விவாதம் நடைபெறவுள்ளது.

அதற்கு அடுத்த நாள், மார்ச் 21ஆம் திகதி, இலங்கை தொடர்பான பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது.

இந்த இரண்டு நாள் அமர்வுகளிலும், பக்க அமர்வுகளிலும் பங்கேற்பதற்காக, இலங்கை அரச தரப்புப் பிரதிநிதிகளும் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளும் ஜெனீவாவில் குவியத் தொடங்கியுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க ஆகியோரை உள்ளடக்கிய இலங்கை அரச தரப்புக்குழு நேற்றுக் காலை ஜெனீவா சென்றடைந்தது.

இந்தக் குழுவினர் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்கவுள்ளதுடன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

ஜெனீவாத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு எடுத்துள்ள முயற்சிகள் குறித்து அவர்கள் விளக்கமளிக்கவுள்ளனர்.

அதேவேளை, இலங்கை அரசைத் தொடர்ந்தும் ஐ.நாவின் கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளுடன் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பச்செலெட் அம்மையாரைச் சந்திக்கவுள்ளனர். (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir


# நல்லாட்சியில் விளையாட்டுத்துறை வீழ்ச்சி

## மஹிந்தானந்த குற்றச்சாட்டு

நல்லாட்சி அரசில் விளையாட்டுத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது ஆட்சிக் காலத்தில் செய்த அபிவிருத்தித் திட்டங்களைப் பராமரிக்க முடியாத நிலையில் இந்த அரசு காணப்படுகிறது. அவர்கள் ஓட விரும்பினாலும் அதற்கான சக்தி அவர்களுக்கு இல்லை.

எனவே, வேலை செய்ய விரும்புபவர்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுமாறு உயர் நிலையில் உள்ளவர்களை நாம் கோரி நிற்கிறோம்.

எமது காலத்தில் நாம் விளையாட்டு ஒழுங்குவிதிகளை ஏற்படுத்தினோம். ஆனால், நல்லாட்சியில் விளையாட்டுத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதனை நான் கூறவில்லை. அர்ஜுன ரணதுங்கவே கூறியிருக்கிறார்.

விளையாட்டு ஒழுங்குவிதிகள் மோசமாக்கப்பட்டுள்ளன. எமது ஆட்சிக்காலத்தில் கிரிக்கெட் நல்ல நிலையில் இருந்தது. ரி -20 போட்டிகளில் இலங்கை அணி முதலாவது இடத்தில் காணப்பட்டபோதிலும் தற்போது 8ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

ஊழல் நிறைந்த நாடாக இலங்கை மாறியுள்ளது. இதனையே நல்லாட்சி வழங்கியுள்ளது - என்றார். (ஐ)

# மைத்திரிபால - மஹிந்த கூட்டணிக்குள் முறுகல்!

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, மார்ச் 19

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் யார் என்ற விவகாரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையே கடும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை நிறுத்துவதற்கு மஹிந்த தரப்பினர் முடிவெடுத்துள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து சனியன்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவே எனக் கூறியிருந்தார். இதுவே தமது நிலைப்பாடு என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது பேசப்படும் அரசியல் கூட்டணி, மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக ஆக்குவதற்கானதல்லவென மற்றுமொரு நிகழ்வில் கருத்து தெரிவித்த கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

இந்நிலையில் மைத்திரி தரப்புக்கும் மஹிந்த தரப்புக்கும் இடையிலான உறவில் கடும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இதனால் இரு தரப்பினருக்குமிடையே கூட்டணி அமைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி அடையும் நிலையை எட்டியுள்ளன.

இதனையடுத்து ஏற்கனவே பொதுஜன பெரமுன கட்சியில் அங்கத்துவம் பெற்றுக்கொண்ட சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# சுற்றுலாத்துறைக்கு வடக்கில் காணிகள் சுவீகரிக்க முயற்சி!

## தடுத்து நிறுத்துமாறு ஸ்ரீநேசன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 19

சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் காணி சுவீகரிப்பு முயற்சியைத் தடுத்து நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

காங்கேசன்துறை, வலி வடக்கு பிரதேசம், கீரிமலை மற்றும் சிமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள பகுதிகளில் உள்ள காணிகளை எதிர்வரும் தினங்களில் நில அளவை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா எனது கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இதேவேளை, மொறக்கொட்டான் சேனை பகுதியிலுள்ள ஆரம்பக்கல்விப் பாடசாலை 1990ஆம் ஆண்டு முதல் இராணுவத்தின் பிடியிலுள்ளது. 29 வருடங்களாக இராணுவம் வசமுள்ள இந்தப் பாடசாலைக் கட்டத்தை பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடி விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

வவுணதீவு தாண்டியடி மயானபூமியில் விசேட அதிரடிப் படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அதனை விடுவிக்கவும் நடவடிக்கை வேண்டும்.

அதேபோன்று, யுத்தத்தில் அகதிகளாக்கப்பட்ட மக்கள் மீண்டும் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே, அவர்களுக்கான காணி, வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (ஐ)




# ராணுவத்தை மறக்க - மன்னிக்க நாம் ஒருபோதுமே தயாரில்லை!

## காணாமற்போனோரின் உறவினர்கள் பாய்ச்சல்

மன்னார், மார்ச் 19

மறப்பதற்கும் மன்னிப்பதற்கும் நாம் ஆடு, மாடுகளை இலங்கை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கவில்லை எனக் காணாமற்போனோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.



வீட்டில் இருந்தவர்களையும், எமது பிள்ளைகளையும், கடலுக்குச் சென்றவர்களையும் பிடித்துச்சென்று காணாமல் ஆக்கிய நிலையில் 'மறப்போம் மன்னிப்போம்' என்று பிரதமர் எவ்வாறு கூறமுடியும் எனவும் அவர்கள் கேள்வியெழுப்பினர்.

நேற்று மாலை மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கக் கூடாது என நாம் தொடர்ந்தும் போராடி வருகின்றோம்.

இந்த மாதத்துக்குள் நாங்கள் பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இங்கு 'மறப்போம் மன்னிப்போம்' என்பதற்கு இடமே இல்லை. நாங்கள் ஆடு மாடுகளைக் கொடுக்கவில்லை. எமது உறவுகளையும், வீட்டில் இருந்தவர்களையும், எமது பிள்ளைகளையும், கடலுக்குச் சென்றவர்களையும் அவர்கள் பிடித்துக்கொண்டு சென்றுள்ளனர்.

எனவே எக்காரணம் கொண்டும் கால அவகாசம் இலங்கை அரசுக்கு வழங்கக் கூடாது. ஏற்கனவே இரு தடவைகள் கால அவகாசம் வழங்கப்பட்டும் இலங்கை அரசு எமக்கு எதனையும் செய்யவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் இருக்கிறார்களோ, இல்லையோ? என்பதை நீதியுடன் கூறவேண்டும்.

இலங்கை அரசில் நம்பிக்கை இல்லாத காரணத்தினாலேயே நாங்கள் ஐ.நா.வை நம்பியுள்ளோம். ஆனால் ஐ.நா. விடம் இலங்கை மேலும் கால அவகாசம் வேண்டும் என்று கோரி அவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? எனவே ஐ.நா. சபை இலங்கை அரசுக்கு இனியும் கால அவகாசம் வழங்கக் கூடாது -என்றார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக கிழக்கு மாகாணத்தில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் பூரண ஆதரவு வழங்கவேண்டும் என்றும் அவர் கோரினார். (ஐ)

**காணி விற்பனை**

உரும்பிராய் வடக்கு, சுன்னாகம் பவர் ஸ்ரேசன் றோட்டில் 22 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு இல - 0772986612

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 19.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.